
# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 1 திங்கட்கிழமை (18-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:263

நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறியதற்காக பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் வழங்கப்பட்ட உணவை சாப்பிடுவதையும் அவர்களின் படகுகள் கைப்பற்றப்பட்டு நெடுந்தீவு மாவலி இறங்குதுறைப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

# அத்துமீறிய 60 இந்திய மீனவர்களை நெடுந்தீவு மீனவர் மடக்கிப் பிடித்தனர்!

## சனி இரவு நடந்த சம்பவத்தில் 15 ட்றோலர் படகுகளும் சிக்கின

நெடுந்தீவு,ஓகஸ்ட்18

**நெடுந்தீவுக் கடற்பகுதிக்குள் அத்துமீறி ஊடுருவி மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் அறுபது பேர் நெடுந்தீவு மீனவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.**

**அந்த மீனவர்களின் 15 மீன்பிடி ட்றோலர்களும் நெடுந்தீவு மாவலித்துறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளன.**

நெடுந்தீவுக் கடற்பகுதிக்குள் நேற்றுமுன்தினம் இரவு அத்துமீறி ஊடுருவிய இந்திய மீனவர்கள் 60பேர் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டிருந்தனர். இவர்கள் 15 ட்றோலர் படகுகளில் வந்திருந்தனர். அந்த ட்றோலர் படகுகளில் ஒன்று நேற்றுமுன்தினம்-இரவு 9.30 மணியளவில் நெடுந்தீவு மாவலித்துறைப் பகுதியில் தரைதட்டியது. இதனையறிந்து அந்தப் பகுதிக்கு படகுகளில் விரைந்த நெடுந்தீவுப் பகுதி

(14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.சிறை உதவி அத்தியட்சகர் குழுவினர் 'உதயன்' அலுவலகத்தில் அட்டகாசம்!

(விவரங்கள் 2 ஆம் பக்கத்தில்)

## எமது அழுத்தத்துக்குப் பயன் ஏற்படாவிட்டால் மீண்டும் ஒரு தேர்தல் குறித்து சிந்திப்போம்!

### பி.பி.ஸி. பேட்டியில் அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்காக எமது உச்சக்கட்ட அரசியல் பலத்தைப் பயன்படுத்துவோம். இது தொடர்பில் அரசுக்கு அழுத்தங்களை வழங்குவோம். விடயங்கள் சாத்தியமாகாதபோது மீண்டும் ஒரு தேர்தலைக் குறித்தே நாம் சிந்திக்கமுடியும்.

இப்படித் தெரிவித்தார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

நேற்றிரவு பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த சனிக்கிழமை கடத்திச் செல்லப்பட்ட மீனவரும் அவருடைய மகனும் இன்று காலை (அதாவது நேற்று) விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் படுமோசமாக சித்திரவதை செய்யப்பட்டு, தாக்கப்பட்டு குற்றுயிரோடு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் புலிகளின் பிரதேசத்திற்கு கூட்டிச் செல்லப்பட்டு தாக்கப்பட்டிருக்கிறார்கள். இது வேதனைக்குரிய விடயமாகும்.

*கேள்வி:-* புலிகள்தான் இவர்களைக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் நகரில் தொடர்ந்து பதற்றம்; இரு முஸ்லிம் மீனவர்கள் விடுவிப்பு

மூதூர்,ஆக.18

மூதூர் நகரில் பதற்றமான சூழ்நிலை தொடர்ந்து காணப்படுகின்றது. பொலீஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். பஸ் போக்குவரத்து, தபால் சேவைகள் என்பன நடைபெறவில்லை. இரவு நேர ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து அமுல்படுத்தப்படுகிறது.

இதற்கிடையில் மூதூரில் இரு

(14ஆம் பக்கம் பார்க்க)

இந்திய மீனவர் ஊடுருவல் குறித்து

## பொலீஸ்மா அதிபருடன் இந்தியத் தூதர் பேச்சு!

வடமராட்சி,ஓக.18

இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் ஊடுருவி மீன் பிடிப்பதைத் தடுத்து நிறுத்தும் நடைமுறை தொடர்பாக இந்திய தூதருடன் பொலீஸ்மா அதிபர் பேச்சுக்களை நடத்திவருகின்றார்.

வடமராட்சி மீனவர்கள் சங்கங்களின பிரதிநிதிகளுடன் நேற்று நடத்திய கலந்துரையாடலின் போது பொலீஸ் உயர் அதிகாரிகள் இதனைத் தெரி

(14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் அகதிகளாகவிருந்த 22 பேர் நெடுந்தீவுக்கு வந்தனர்

நெடுந்தீவு,ஓக.18

தமிழகத்திலிருந்து படகுகளில் வந்த சிறுவர் மற்றும் பெண்கள் உட்பட 22 பேர், நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் நெடுந்தீவு மேற்குப் பனங்காணிக் கடற்கரையில் வந்து இறங்கினர்.

இவர்கள் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

இவர்களை நெடுந்தீவுப் பிரதேச செயலக அதிகாரிகள் அழைத்துச்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அராலியில் தேடுதல்

கிளிநொச்சி,ஓக.18

அராலிப்பகுதியில் உள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் பணிமனை கடந்த வெள்ளி அதிகாலை இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டது.

சுற்றிவளைப்பில் ஈடுபட்ட இராணுவத்தினர் அயல்பிரதேசங்களையும், அப்பகுதி மக்கள் வீடுகளையும் கடும் சோதனைக்குட்படுத்தினர்.

விடுதலைப்புலிகளின் அலுவலகமும் சோதனைக்குள்ளானது. அதே வேளை, அப்பகுதி மக்களும் கடும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

அதிகாலை வேளையில் இடம்பெற்ற இச்சுற்றிவளைப்பால் இப்பகுதியில் பதற்றம் நிலவியது என 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

## புலிகளின் அலுவலகம் அம்பாறையில் தீவைப்பு

கிளிநொச்சி,ஓக.18

அம்பாறையில் விடுதலைப்புலிகளின் அரசியல் பணிமனையுடன் இயங்கி வந்த மக்கள் தொடர்பாடல் அலுவலக கொட்டகைக்கு அதிரடிப் படையினர் தீ வைத்து அதனை எரித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் இரவு நேரம் அங்கு சென்ற விசேட அதிரடிப் படையினர், கொட்டகையைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டுச் சென்றனர் என்று

(14ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர்களின் போராட்டத்தைப் புரிந்து அதற்கு இந்தியா ஆதரவு தரவேண்டும்

## அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கோரிக்கை

கொழும்பு,ஓக.18

இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளைப் பார்த்துக் கொண்டு இந்தியா ஒதுங்கி நிற்கக் கூடாது. எமது மக்களின் போராட்டத்தைப் புரிந்துகொண்டு எமக்குத் தகுந்த ஆதரவையும் சமாதான முயற்சிகளில் தன்னால் இயன்ற பங்களிப்பையும் இந்தியா வழங்க வேண்டும். இதையே நாம் விரும்புகிறோம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியா குறித்த எமது நிலைப்பாடு தொடர்பாக பத்திரிகையாளர்கள் சந்திப்பில் எமது தேசியத் தலைவர் தெளிவாக விளக்கியிருந்தார். நாம் இந்தியாவிற்கு எதிரானவர்கள் அல்லர். இந்திய அரசிற்கு எதிராக நாம் ஒரு போதும் செயற்படப்போவதில்லை. எங்களுடைய போராட்டத்தை இந்தியா புரிந்துகொள்ளவேண்டும்.

இலட்சியத்தில் ஒன்றுபட்டவர்களே தமிழீழ விடுதலைப் புலிகள். எமது இலட்சியத்தை ஏற்றுக்கொண்டு, தமிழ் மக்களுக்கான சுதந்திரமான வாழ்க்கைக்கு உதவும் முகமாக யாரும் எம்முடன் சேர்ந்து செயற்படலாம். இதற்கு நாம் எவருக்கும் சந்தர்ப்பம் வழங்குவோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பாதையைப் புரிந்துகொண்டு, தமிழ் மக்களுக்கான விடிவுப் பாதையை

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சிறை உதவி அத்தியட்சகர் தலைமையில் வந்த குழு 'உதயன்' அலுவலகத்தில் நேற்றுப் பெரும் அட்டகாசம்!

யாழ்ப்பாணச் சிறைச்சாலை உதவி அத்தியட்சகர் சிவசுந்தரம் தலைமையிலான குழுவினர் நேற்று உதயன் அலுவலகத்துக்கு வந்து தகாத வார்த்தைப் பிரயோகங்களால் ஊழியர்களைத் திட்டியதுடன் மிக மிக அநாகரிகமாகவும் நடந்து கொண்டனர்; அட்டகாசமும் புரிந்தனர்.

நேற்றுமுன்தினம் 'உதயன்' பத்திரிகையின் கடைசிப் பக்கத்தில் "சிறையில் தாக்கப்பட்டதாக யாழ். இளைஞர் முறைப்பாடு" என்று வெளியான செய்தியால் கடுப்படைந்தே சிறைச்சாலை உதவி அத்தியட்சகர் இவ்வாறு மிக மோசமான முறையில் நடந்து கொண்டார்.

அவருடன் சிறைக்காவலர்கள் மற்றும் சிறைச்சாலை அலுவலர்கள் என 5 பேர் 'உதயன்' அலுவலகத்துக்கு வந்திருந்தனர்.

சிறைச்சாலைக்குச் சொந்தமான நீல நிற பஸ்ஸில் பிற்பகல் 1.35 மணியளவில் 'உதயன்' முன்பாக வந்திறங்கிய இவர்கள் தடாலடியாக விளம்பர, வரவேற்புப் பகுதிகளுக்குள் நுழைந்தனர்.

உள்ளே நுழைந்ததும் சிறைச்சாலை உதவி அத்தியட்சகர் சிவசுந்தரம் "எங்கேயடா ஆசிரியர்.......?" என்று தொடங்கி தாறுமாறாகப் பேச ஆரம்பித்தார். எழுத்தில் வடிக்க முடியாத அளவுக்கு தகாத - தூஷண - வார்த்தைப் பிரயோகங்களை அதிகமாகப் பயன்படுத்திய அவர், மிக மிக மோசமாக - அநாகரிகமாக - நடந்து கொண்டார்.

'உதயனில்' வெளியான செய்தி மனித உரிமைகள் ஆணைக்குழுவில செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்றை ஆதாரமாகக்கொண்டே வரையப்பட்டிருந்தது.

அந்தச் செய்தியில் "சிறைச்சாலை அதிகாரிகளால் தான் கடுமையாகத் தாக்கப்பட்டதுடன் பாலியல் ரீதியிலும் துன்புறுத்தப்பட்டதாக" அந்த இளைஞர் தனது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

'உதயன்' அலுவலகத்துக்கு வந்து 'சத்தம்' போட்ட சிறைச்சாலை உதவி அத்தியட்சகர், "நாங்கள் அடித்தோம என்பது உண்மைதான்; அதனை எழுதுங்கள். அதைப் பற்றி எமக்குப் பிரச்சினை இல்லை. ஆனால், நாம் பாலியல் வல்லுறவு புரிந்தோம் என்பதில் உண்மையில்லை. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பான பிரதி எங்களிடம் இருக்கிறது அதிலும் அவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை" எனக் கோபாவேசமாகக் கத்தினார்.

அவரது மறுப்புத் தொடர்பாக முழுமையான விவரத்தை எழுத்துவடிவில் பெறுவதற்கு ஆசிரியபீடத்தினர் எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இருந்த அவர், மீண்டும் மீண்டும் தகாத வார்த்தைப் பிரயோகங்களையே மேற்கொண்டபடி இருந்தார். கூட வந்தவர்கள் அவருக்கு ஒத்தூதினர்.



நேற்று உதயன் அலுவலகத்தில் இடம்பெற்ற சம்பவங்களைப் படம்பிடித்த அலுவலகப் படப்பிடிப்பாளரை நோக்கி சீற்றத்துடன் பாய்ந்தோடிவரும் சிறைக் காவலர்.

சுமார் ஒரு மணி நேரமாக உதயனின் முன்பக்கத்தில் இந்தக் கலாட்டா இடம்பெற்றுக் கொண்டிருந்தது. இந்தச் சமயத்தில் சர்ச்சைப்பட்டுக் கொண்டிருந்த சிறைச்சாலை உதவி அத்தியட்சகரையும் அவருடன் வந்தவர்களையும் 'உதயன்' படப்பிடிப்பாளர் படம் எடுக்க முற்பட்டார். அதனைக் கண்ட சிறைக்காவலர் ஒருவர் படப்பிடிப்பாளரை நோக்கிப் பாய்ந்து சென்று "டேய். படம் எடுக்காதே. எடுத்தியானால் அடிப்பேன்" - என்று மிரட்டி அவரைத் தாக்க முற்பட்டதுடன் அவரிடம் இருந்து படப்பிடிப்புக் கருவியைப் பறிப்பதற்கும் முயற்சி செய்தார்.

எனினும், ஏனையவர்கள் உடனடியாக அங்கு கூடியதை அடுத்து அசம்பாவிதங்கள் எதுவும் நிகழாமல தடுக்கப்பட்டது.

இறுதியில் ஒருவாறு 'உதயன்' அலுவலகத்தைவிட்டு வெளியேற அவர்கள் முன்வந்தனர். எனினும், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரதி ஒன்றை 'உதயன்' ஆசிரியபீடத்துக்கு வழங்குவதாகத் தெரிவித்து அவர்கள்விட்ட அழைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. சிறை ஆணையாளர் சிவசுந்தரம் தந்த பிரதி இங்கு முழுமையாகப் பிரசுரமாகின்றது. நேற்றுமுன்தினம் 'உதயன்' வெளியிட்ட செய்தியும் கூடவே பிரசுரமாகிறது. உண்மை நிலையை வாசகர்களே தெளிவுபடுத்திக்கொள்ளலாம்.

---

டெ.ஏ. அன்ரனி ஜெயக்குமார்
21, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

இணைப்பாளர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் இடம்பெறுகின்ற மிகவும் மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நான் இந்த முறைப்பாட்டைச் செய்கின்றேன்.

தனிப்பட்ட பிரச்சினை ஒன்று காரணமாக நான் P.M.இம்மானுவேல் என்கிற கத்தோலிக்க குருவினதும் திரு. ராஜேஸ்வரன் என்பவரினதும் திட்டமிட்ட பொய்க்குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் யாழ்ப்பாண நீதிமன்றத்தினால் இரண்டு தடவைகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டேன்.

நான் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த நாள்களில் சிறைச்சாலை உயரதிகாரியான திரு. சிவசுந்தரம் என்பவர், எனக்கு எதிரான வழக்கின் (7527) வழக்காளிகளுடனான நட்பு காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து என்னை வெளியேற்றுவதற்கான அவர்களின் நோக்கத்திற்கு என்னை இணங்கவைப்பதற்காக மிகவும் மோசமாக - சாதாரண மனிதன் வார்த்தைகளில் வெளிப்படுத்தத் தயங்குகின்ற - அருவருக்கத்தக்க சித்திரவதைகளை எனக்கு வழங்கினார். நான் விளக்கமறியலில் வைக்கப்பட்ட முதல் நாளில் திரு. சிவசுந்தரம், திரு.பாலேந்திரா ஆகியோர் கைகள், கால்களினாலும் மொத்தமான தடி ஒன்றினாலும் என்னை மிக மோசமாகத் தாக்கினார்கள்.

அன்றைய தினம் விளக்கமறியலுக்காக சிறைக்குக் கொண்டுவரப்பட்ட அனைவரும் கடுமையாகத் தாக்கப்பட்டனர். எனினும், நான் மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டேன். தாக்குதலில் எனது மூக்கிலிருந்து இரத்தம் வழிந்தது. வலது கையின் மணிக்கட்டிற்கு அருகில் ஏற்பட்ட பாதிப்பு இன்னமும் மாறவில்லை. பாதங்களில் தடியால் கடுமையாகத் தாக்கப்பட்ட போதிலும் அந்த வலி இப்போது மாறிவிட்டது.

முதல் நாள் நான் தாக்கப்பட்ட சிறிது நேரத்தில் UNHCR இன் Protection officers ஆன செல்வி Johanna, Mr. Fergus ஆகியோர் அங்கு வந்து என்னைப் பார்வையிட்டனர்.

நான் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டது, தழும்புகள் காரணமாக தெளிவாக அவர்களால் அவதானிக்கப்பட்டு அதுபற்றி முறைப்பாடு செய்யுமாறு அவர்கள் என்னைக் கேட்டபோது மீண்டும் மிகமோசமான தாக்குதலிற்கு - அதைவிட வித்தியாசமும் கொடூரமுமான தண்டனைக்கு - உள்ளாக்கப்பட நேரிடும் என்கிற அச்சம் காரணமாக நான் முறையிட வேண்டாம் என்று அவர்களைக் கேட்டுக்கொண்டேன்.

அன்று விளக்கமறியலுக்குக் கொண்டுவரப்பட்ட T.லக்ஸ்மன் என்கின்ற இளைஞனின் தந்தை தண்டனைபெற்று சிறையில் உள்ளார். அவரை அழைத்துவந்து தகப்பனையும் மகனையும் ஒருவருக்கொருவர் மாறிமாறி அடிக்குமாறு நிர்ப்பந்தித்தனர். அவர்களிற்கு வழங்கப்பட்ட இன்னொரு தண்டனை, வார்த்தைகளில் எழுதத் தகாதது என்பதனால் அதனைத் தவிர்த்துக்கொள்கின்றேன்.

நான் தடுத்துவைக்கப்பட்டிருந்த இரண்டாவது நாளில் ICRCயின் பிரதிநிதியான Miss Corina என்பவர் என்னைச் சந்தித்தார். அவரும் தாக்குதலின் வெளி அடையாளங்களை அவதானித்து முறைப்பாடு செய்ய ஆலோசனை கூறியபோதும் நான் அச்சம் காரணமாக அதற்கு உடன்படவில்லை.

முதல்முறை நான் தடுத்துவைக்கப்பட்டிருந்தபோது அங்கு தாக்கப்பட்டவர்களில் தெய்வேந்திரராசா, அவரது மகன் லக்ஸ்மன் ஆகியோருடன் ஆனைக்கோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு நபர் மிகக்கடுமையாகத் தாக்கப்பட்டார்.

ஏற்கெனவே சிறிதளவு மனநிலை பாதிக்கப்பட்ட நபராக அவதானிக்கப்பட்ட அவர், அவரது குடும்ப உறுப்பினர்கள் குறித்து பாலியல் ரீதியான கேவலமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு சங்கிலியால் கட்டப்பட்டு மோசமாகத் தாக்கப்பட்டார்.

தாக்குதல்களால் அந்நபரின் மனநிலை மோசமாகப் பாதிக்கப்பட்டதாகப் பலர் பேசிக் கொண்டார்கள். பிணையில் விடுவிக்கப்பட்ட அந்த நபர், மறுநாள் தனது மகனை வெட்டிக் கொன்றதாகக் குற்றம்சாட்டி மீணடும் சிறைக்கு கொண்டுவரப்பட்டார். மீண்டும் சிறைக்குக் கொண்டுவரப்பட்ட அந்த நபர், மிகக் கடுமையாக, கொடூரமாகத் தாக்கப்பட்டார். அவரது கால் ஒன்று முறிக்கப்பட்டு - பின்னர் வைத்தியசாலைக்கு அனுப்பி சிகிச்சை வழங்கப்பட்டது (POP போடப்பட்டுள்ளது).

இரண்டாவது தடவையாக நான் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த போது முன்னரைவிடவும் அதிகமாகத் துன்புறுத்தப்பட்டேன்.

பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டதில் எனக்கு ஏற்பட்ட சிறிய காயம் இன்னமும் மாறவில்லை. இக்காலப்பகுதியில் வயிற்றுவலி காரணமாக நான் மருத்துவ உதவிகோரி கெஞ்சியபோதும் நடிப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு தாக்கப்பட்டேன்.

கடந்த மாதம் விளக்கமறியலில் இருந்தபோது தாக்கப்பட்டு அது பற்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்த P.பெனடிக்ற் என்ற இளைஞனைப் பார்வையிட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் சிறைச்சாலைக்கு வந்து சென்ற பின்னா அந்த இளைஞர் தாக்கப்பட்டதுடன் அவருடைய நெற்றியில் கல்லை வைத்து சூரியனை நோக்கியபடி நிலத்தில் முழங்காலிட்டபடி சிலமணி நேரம் வெய்யிலில் இருக்க அந்த இளைஞர் நிர்ப்பந்திக்கப்பட்டார்; எழுதுவதற்கு அருவருப்பான ஒரு தண்டனையும் அவருக்கு வழங்கப்பட்டது.

மனித உரிமைகள் ஆணைக்குழு, ICRC, UNHCR ஆகியவற்றின் பிரதிநிதிகள் சிறைச்சாலைக்கு வரக்கூடாது என்றும், அவ்வாறு வந்தால் அதற்குக் காரணமானவர்கள் தண்டனைக்கு உள்ளாக நேரிடும் என்றும், மீண்டும் மனித உரிமைகள் ஆணைக்குழு அல்லது வேறு யாராவது வந்தால் அவர்களுடன் வரும் பெண்ணை கட்டிப்பிடித்து முத்தம் கொடுப்பதன் மூலம் சிறைச்சாலைக்கு அவர்கள் வருவதைத் தடுக்கவேண்டும் என்றும் P.பெனடிக்ற் என்ற இளைஞரும் நானும் எச்சரிக்கப்பட்டோம்.

இவ்வாறு பெரும்பாலானவர்கள் கடுமையாகத் துன்புறுத்தப்படுகின்ற போதிலும் அச்சம் காரணமாக யாரும் முறைப்பாடு செய்வதில்லை.

முறைப்பாடு செய்தால்கூட எவராலும் தங்களை எதுவும் செய்துவிட முடியாது என்றும், மீண்டும் சிறைக்கு வரும்போது மிகக்கடுமையாகத் தாக்கப்படுவீர்கள் என்றும் வெளிப்படையாகவே சகலரும் எச்சரிக்கப்படுகின்றனர்.

நான் தாக்கப்பட்டபோது யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறுமாறு திரு.சிவசுந்தரம், பாலேந்திரா உள்ளிட்ட சிலரால் எச்சரிக்கப்பட்டேன். அவர்களை என்னால் அடையாளம் காட்ட முடியும்.

எவ்வாறாயினும் எனது அடிப்படை மனித உரிமை மீறப்பட்டு பொய்க்குற்றச்சாட்டின் அடிப்படையில் நான், தாக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டமைக்கும் இப்போதும் யாழ்ப்பாணத்தைவிட்டு உடன் வெளியேறுமாறு இனம் தெரியாதவர்களினால் மிரட்டப்படுவதற்கும் காரணமும் பொறுப்புமான பிரதான நபர்களாக,


Fr. P.M இம்மானுவேல் - St. Annes church - Jaffna.
Mr. Sivasuntharam -5th cross street - Jaffna
Mr. S.Rajeswaran - 5th cross street - Jaffna

ஆகியோரை நான் அடையாளம்காட்ட வேண்டியுள்ளது.

அவர்களுடன் தொடர்புடைய சகலரையும் அணுகி இவ்விவகாரத்தில் நியாயமான தீர்வுபெற உதவுமாறு கோரி நிறைவுசெய்கிறேன்.

இப்படிக்கு
உண்மையுள்ள
D.E.A.Jeyakumar.

### முறைப்பாட்டுப்பிரதி



---

உதயன் செய்தி

## சிறையில் தாக்கப்பட்டதாக யாழ். இளைஞர் முறைப்பாடு

### மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரிக்கும்

யாழ்ப்பாணம்,ஓக.16

யாழ். சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் அதிகாரிகளால் தான் கடுமையாகத் தாக்கப்பட்டதாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளார்.

கோவில் வீதியைச் சேர்ந்த அந்தோனி ஜெயக்குமார் (வயது23) என்ற இளைஞரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

சிறைச்சாலையில் தான் தடுத்து வைக்கப்பட்டிருந்த 23 நாள்களில் சிறைச்சாலை அதிகாரிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டதுடன் பாலியல் ரீதியிலும் துன்புறுத்தப்பட்டதாகவும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடு குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை நடத்தவுள்ளது. இதற்காக சிறைச்சாலை அத்தியட்சகர் சிவசுந்தரத்தை எதிர்வரும் 21ஆம் திகதி விசாரணைக்கு சமுகமளிக்கும்படி அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

---

# சிறை உதவி அத்தியட்சகர் நேற்று மாலை அனுப்பிய கடிதம்

சிறைச்சாலை,
யாழ்ப்பாணம்.
2003-08-17

ஆசிரியர்,
உதயன் பத்திரிகை நிறுவனம்
யாழ்ப்பாணம்.

16-08-2003 'உதயன்' பத்திரிகையில் பிரசுரமாகியிருந்த பாலியல் வல்லுறவு சம்பந்தமான செய்தியில் 'சிறைச்சாலை ஊழியர்கள் பாலியல் வல்லுறவில் ஈடுபட்டார்கள்' என பிரசுரிக்கப்பட்ட செய்தி தவறானது. இச்செய்தியை தவறான செய்தியென பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இப் பத்திரிகைச் செய்தி தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவினால் தங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்திலும்கூட (பாலியல் வல்லுறவு) சம்பந்தமான எதையும் குறிப்பிடப்படாமல் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டது தொடர்பான விசாரணை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, இவ்விசாரணை தொடர்பாக ஒரு தனிநபரின் கூற்றினை ஏற்று ஒரு செய்தியை பிரசுரமாக்குவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட ஒரு திணைக்கள [illegible] பெறாது செய்தி வெளியிட்டது தவறானது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எனவே, 'பாலியல் வல்லுறவு' என்ற பொருள்பட பிரசுரமாகிய செய்தியை வாபஸ் பெற்று ஏற்புடையதான ஒரு செய்தியை பிரசுரிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

கையொப்பம்

*ஆசிரியர் குறிப்பு:*

*1. எமது செய்தியில் பாலியல் வல்லுறவு இடம்பெற்றதாக எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. பாலியல் துன்புறுத்தல் இடம்பெற்றதாகவே பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதனை முறைப்பாட்டாளர் அவரது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.(சிறை உதவி அத்தியட்சகரே எமக்கு அனுப்பிவைத்த - முறைப்பாட்டுக்காரரின் முறைப்பாட்டுப் பிரதியில் - அது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது).*

*2. எமது செய்தி முறைப்பாடு பற்றிய ஒரு தகவலே தவிர, அது தொடர்பான விசாரணையின் தீர்ப்பு அல்ல. தீர்ப்பு வரும்போது உண்மை நிலை தானே தெரியவரும்.*

*3. சிறைச்சாலையில் தாக்கப்பட்டதாக யாழ்ப்பாண இளைஞன், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ததும் அது தொடர்பான விசாரணைகளுக்காக யாழ். சிறைச்சாலை உதவி அத்தியட்சகரை விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதும் நூற்றுக்கு நூறு உண்மையான செய்தி.*

*4. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாட்டைச் செய்திருந்த இளைஞர் [illegible] யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.*

(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க. தலைவர் கருணாநிதி கைது செய்யப்படுவாரா?

## அவர் மீது தமிழக அரசு வழக்குப் பதிவு

தி.மு.க தலைவர் மு.கருணாநிதி கைதுசெய்யப்படுவாரா? அரசு ஊழியர்களின் வேலை நிறுத்தத்தைத் தூண்டினார் என்று அவருக்கு எதிராக 'எஸ்மா' மற்றும் 'டெஸ்மா' சட்டங்களின் கீழ் தமிழக அரசு வழக்குப் பதிவு செய்திருப்பதையடுத்து அவர் கைதுசெய்யப்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

அரசு ஊழியர்களின் வேலை நிறுத்தத்தைத் தூண்டினார் என்று காங்கிரஸ் செயல் தலைவர் இளங்கோவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் வரதராஜன், இந்தியக் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் நல்லக்கண்ணு ஆகியோர் மீதும் இச்சட்டங்களின் கீழ் வழக்குகள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. அவர்களும் கைதுசெய்யப்படக்கூடிய வாய்ப்புள்ளது.

பொதுத்துறைச் செயலாளர் பிச்சாண்டியின் உத்தரவின் பேரில், குற்றப் பிரிவுப் பொலீஸார் இந்த வழக்கைப் பதிவு செய்துள்ளனர்.

அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தத்தை ஊக்கிவிக்கும் வகையிலும், தூண்டும் வகையிலும் பேசினார் எனவும், அறிக்கைகள் விட்டனர் எனவும் இவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முதல் தகவல் அறிக்கையின் நகல்கள் சென்னை கூடுதல் பெருநகர விடுமுறைக்கால நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.



'டெஸ்மா' சட்டத்தின் 5ஆவது பிரிவின் கீழ் குற்றஞ்சாட்டப்படுவோருக்கு 3ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அல்லது 5 ஆயிரம் ரூபா அபராதம் அல்லது இரண்டு தண்டனைகளும் சேர்த்து வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பங்களாதேஷில் துப்பாக்கிச் சமர்: 7 பொலீஸார், 10 தீவிரவாதிகள் காயம்

டாக்கா,ஓக.18

பங்களாதேஷின் ஜெய்ப்பூர் ஹாட் மாவட்டத்தில் பொலீஸாருக்கும் இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களுக்குமிடையே கடந்த வெள்ளியன்று துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் 10 தீவிரவாதிகள், 10 பொலீஸார் காயமடைந்தனர்.

தலைநகர் டாக்காவுக்கு வடக்கே 208 மீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும் உத்தர் மகேஷ்பூர் கிராமத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இது தொடர்பாக ஜமாத் - உல் - முஜாஹிதீன் என்ற தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த 19 பேர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் 4 பேர் பொலீஸாருடன் நடந்த மோதலில் காயமடைந்தவர்களாவர்.

இந்த அமைப்பு, தலிபான்களின் வழியில் ஆட்சி அமைப்பது என்ற இலட்சியத்துடன் போராடி வருகின்றது.

2003ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்த அமைப்புக்கு அந்நாடு தடைவிதித்திருந்தது.

இந்நிலையில் இந்த அமைப்பைச் சேர்ந்த 100 பேர் உத்தர் மகேஷ்பூர் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றில் பதுங்கியிருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து பொலீஸார் சுற்றிவளைப்பொன்றை மேற்கொண்டனர். (ம)

# சவூதி அரேபியாவில் 11தீவிரவாதிகள் கைது!

சவூதி அரேபியா பொலீஸார் 11 தீவிரவாதிகளை சந்தேகத்தின்பேரில் கைதுசெய்துள்ளனர். இவர்களிடமிருந்து பெருமளவில் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. இதில் ஏவுகணைகள் மற்றும் வெடிக்கக்கூடிய இரசாயன ஆயுதங்களும் அடங்கும்.

200இற்கும் மேற்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கண்ணீர்ப் புகைகளையும் வெடிமருந்தையும் உபயோகித்து இரண்டு மாடிக் கட்டடமொன்றைத் தகர்த்துள்ளனர்.

சவூதி, பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சந்தேக நபர்கள் இதில் மறைந்திருந்தனர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இக்கட்டடம் தகர்க்கப்பட்டது.

பாதுகாப்புப் பிரிவினர் 93 டாங்கி எதிர்ப்பு எறிகணைகளையும், 50கிரனேட்டுகளையும், கனரகத் துப்பாக்கிகளையும், வெடிக்கக்கூடிய இரசாயனப் பொருள்களையும், 3 பாதுகாப்பு உடைகளையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்த ஆயுதங்கள் ஜேர்மனியிலிருந்து கடத்திவரப்பட்டதாக சவூதி அரேபியா குற்றஞ்சாட்டியுள்ளது. ஜேர்மன் சட்டவிரோதமாக ஆயுதங்களை விற்பனை செய்யும் நாடு.

இது பயங்கரவாதத் தாக்குதலுக்கான அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இரு நாடுகளும் தமது எல்லைக் கோடுகளைப் பாதுகாப்பதற்கான ஒப்பந்தத்தில் கடந்த ஜூன் மாதம் கைச்சாத்திட்டுள்ளன.

### சீனாவில் பூகம்பம் 2பேர் பலி; 43 பேர் காயம்!

பீஜிங்,ஓக.18

சீனாவில் கடந்த சனியன்று ஏற்பட்ட பூகம்பத்தில் 2பேர் இறந்துள்ளதுடன் 43 பேர் காயமடைந்தனர். 2ஆயிரத்து 700 வீடுகள் சேதமடைந்துள்ளன.

சீனாவின் வடக்குப் பகுதியான [illegible]வில் பூகம்பம் ஏற்பட்டது. இது 5.9 றிச்டர் அளவு இருந்தது [illegible]விக்கப்படுகின்றது.

### பெண்ணின் மூக்கைக் கடித்த இளைஞனுக்கு சிறை!

ஜேர்மனியைச் சேர்ந்த 50 வயதுப் பெண் ஒருவரின் மூக்கைக் கடித்த இளைஞனுக்கு நீதிபதி 18 மாத சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

இந்தப் பெண்ணுக்கும் 26 வயது இளைஞன் ஒருவனுக்குமிடையில் காதல் மலர்ந்தது. ஒரு நாள் அந்த இளைஞன் குடிபோதையில் காதலியின் மூக்கைக் கடித்துவிட்டான்.

இதனால் அந்தப் பெண்ணுக்கு 6 அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன.

பொலீஸார் விசாரணை நடத்தி அந்த இளைஞன் மேல் வழக்குத் தொடர்ந்தனர்.

நீதிபதி, இளைஞனுக்கு 18 மாதச் சிறைத்தண்டனை விதித்தார். எனினும், நீதிமன்றத்தில் சாட்சியமளித்த அந்தப் பெண், தான் இன்னும் அந்த இளைஞனைக் காதலிப்பதாக நீதிபதியிடம் தெரிவித்தார்.

# தீவிரவாதி சுபைர் கொடுத்த தகவல்கள்தான் அல்கெய்டா முக்கிய நபர் கைதுக்கு உதவியது

## தாய்லாந்துப் பொலீஸார் தகவல்

தீவிரவாதி சுபைர் கொடுத்த தகவலின் பேரிலேயே அல்கெய்டா அமைப்பின் முக்கிய நபரும், ஜெமா இஸ்லாமியா தலைவருமான ஹம்பாலி கைதுசெய்யப்பட்டார்.

இத்தகவலை தாய்லாந்துப் பொலீஸார் வெளியிட்டுள்ளனர். தீவிரவாதி சுபைர் அல்கெய்டா அமைப்பு உறுப்பினர். இவர் கடந்த மாதம் தாய்லாந்து உளவுத்துறைப் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

சுபைதரிடம் பொலீஸார் நடத்திய விசாரணைகளிலேயே 'ஹம்பாலி' பற்றிய தகவல்கள் தெரியவந்தன. ஹம்பாலிக்கு குண்டுவெடிப்பு சம்பவங்களில் உள்ள தொடர்புகள குறித்தும் சுபைர் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷியா மட்டுமன்றி பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட பல நாடுகளில் நடைபெற்ற குண்டுவெடிப்பு வழக்குகளில் ஹம்பாலிக்கு தொடர்புகள் இருப்பதால் சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஈராக்கில் பிரதான எண்ணெய் விநியோகக் குழாயின் இடையில் ஏற்பட்ட பெரும் வெடிப்புக் காரணமாக எண்ணெய் எற்றுமதி நிறுத்தப்பட்டுள்ளது. இந்த ஏற்றுமதி சில நாள்களின் முன்னரே மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. வெடிப்புக்கு தீவிரவாதச் செயல் காரணமாக இருக்குமென விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



# உலகப் போரின் போது பயன்படுத்திய குண்டுகள் ஜேர்மனியில் கண்டெடுப்பு!

உலகப்போரின் போது விமானத்தினால் வீசப்பட்ட 8 சக்தி வாய்ந்த குண்டுகள் ஜேர்மனியிலுள்ள ஏரியொன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டன.

அங்குள்ள கான்ஸ்டனிஸ் ஏரியிலேயே குண்டுகள் கண்டெடுக்கப்பட்டன.

முன்னொருபோதும் வற்றாத இந்த ஏரி, இம்முறை ஐரோப்பாவில் நிலவிவரும் கடும் வெப்பம் காரணமாக வற்றியது. அதனாலேயே ஏரியில் புதைந்திருந்த குண்டுகள் வெளியே தெரிந்தன.

கண்டெடுக்கப்பட்டவற்றில் நான்கு பொஸ்பரஸ் குண்டுகள் ஆகும். அத்துடன், ஏரியின் கரைப் பகுதியில் ஏராளமான கையெறி குண்டுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஏரி சுவிட்ஸர்லாந்தையொட்டி அமைந்துள்ளது. நேச நாடுகள் அமைப்பைச் சேர்ந்த அமெரிக்கா, பிரிட்டன் போர் விமானங்களின் விமானிகள் போரில் பங்கேற்காத சுவிட்ஸர்லாந்தைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது.

அதனால், மிகுதியாக இருந்த குண்டுகளை இந்த ஏரியில் போட்டுவிட்டுச் சென்றிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

# ஜகார்த்தா குண்டுவெடிப்பு தொடர்பாக 10 பேர் வரை பொலீஸாரால் கைது!

ஜகார்த்தா,ஓக.18

ஜகார்த்தா ஐந்து நட்சத்திர ஹோட்டலில் கடந்த ஓகஸ்ட் 5ஆம் திகதி இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் 10 பேரை ஜகார்த்தா பொலீஸார் கைதுசெய்துள்ளனர். மேலும் சில சந்தேக நபர்கள் தேடப்பட்டு வருகின்றனர்.

முதலில் நாம் 6 பேரைக் கைது செய்தோம். பின்னர் 4 பேர் கைது செய்யப்பட்டனர் எனப் பொலீஸ் உயர் அதிகாரியான ஜெனரல் டாபாச்டியர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இக்குண்டுவெடிப்பின் சூத்திரதாரியாக 28 வயது அஸ்மார் லாடின் சானியை பொலீஸார் அடையாளம் கண்டனர்.

இது ஜகார்த்தாவில் இடம்பெற்ற இரண்டாவது குண்டுவெடிப்பாகும். கடந்த வருடம் ஜகார்த்தாவிலுள்ள பாலித்தீவு இரவு விடுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 202 பேர் கொல்லப்பட்டனர்.

இதில் 88 பேர் ஆஸ்திரேலியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# நான்கு பலஸ்தீனிய நகரங்களிலிருந்து இஸ்ரேல் படைகள் மீளப்பெறப்படவுள்ளன

ஜெருசலேம்,ஓக.18

மேற்குக்கரையின் நான்கு நகரங்களிலிருந்து படைகளை மீளப்பெறுவதற்கு இஸ்ரேல் சம்மதித்துள்ளது.


மீளப்பெறும் ஒப்பந்தம் கடந்த வெள்ளியன்று இஸ்ரேலிய பாதுகாபபு அமைச்சர் ஷாஉல் மாபாஷக்; பலஸ்தனப் பாதுகாப்புத் துறைத் தலைவர் மொஹமட் டஹ்லான் ஆகியோருக்கிடையில் கைச்சாத்தானது.

இஸ்ரேலிய நகரங்களில் இரட்டைத் தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்று மூன்று நாள்களின் பின்னா- பலஸ்தீன மூத்த தளபதியின் மரணம் இடம்பெற்று 36 மணித்தியாலத்தின் பின்னர் - இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

இதன்படி மேற்குக்கரையின் நகரங்களான ஜெரிகோ, கல்ஹிலியா ஆகியவற்றிலிருந்து படைகள் அடுத்த வாரமளவில் மீளப்பெறப்படும். தொடர்ந்து ரமல்லா, ரல்கரீம் ஆகிய நகரங்களிலிருந்து படைகள் மீளப்பெறப்படும் மேலும் சில வீதித்தடைகளும் அகற்றப்படவுள்ளன.

மத்தியகிழக்கு சமாதான திட்டத்தை முன்னெடுத்து வரும் அமெரிக்கா, பலஸ்தீனிய நகரங்களிலிருந்து இஸ்ரேல் தனது படைகளை வாபஸ் செய்யவேண்டுமென்று அழுத்தம் கொடுத்து வந்தது.

அதேவேளை, காஸாவில் இஸ்லாமிய அமைப்பான ஹமாஸ் பேச்சாளர் இந்த ஒப்பந்தம் பற்றிக் கூறுகையில், "இந்த ஒப்பந்தம் வெறும் வாய்ப்பேச்சு. எமது மக்களுக்குத் தேவை முழுமையான படைகள் மீளப்பெறுதலும், முழுமையான சுதந்திரமும்தான்" - என்றார்.



ஈராக்கில் கெரில்லாத் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்ற அதேவேளை - புனரமைப்புப் பணிகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அந்தப் பணிகள் நடக்கும் இடங்களில் கூட்டுப்படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

# பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இந்தோனேஷிய சுதந்திரதின விழா!

ஜகார்த்தா,ஓக.18

இந்தோனேஷியாவின் சுதந்திரதின விழா பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று கொண்டாடப்பட்டது.




நாட்டின் தலைநகர் ஜகார்த்தாவில் குண்டுவெடிப்பு இடம்பெற்று இரு வாரங்களே ஆகின்றன. அதனால், பாதுகாப்பு பிரிவினரை உஷார் நிலையில் இருக்கும்படி உத்தரவிடப்பட்டிருந்தது.

இரண்டு லட்சத்து முப்பதாயிரம் பொலீஸார் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

சுதந்திரதின வைபவத் தில் கலந்துகொண்ட வெளிநாட்டு தூதுவர்கள், அமைச்சர்கள், முக்கியஸ் தர்கள் ஆகி யோருக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது.

# அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுக்கு மின்னஞ்சல் மூலம் கொலை மிரட்டல்

## கைதான இளைஞர் இன்று நீதிமன்றில் ஆஜர்

டாக்கா,ஓக.18

மின்னஞ்சல் மூலம் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுக்கு கொலை மிரட்டல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இளைஞர் ஒருவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த இளைஞரின் பெயர் வோல்கர் செசனோர்வஸ்கி. 33 வயதான இவர் அமெரிக்காவில் வசித்துவருகிறார். இவர் போர்ட்லாடர்டேல் நகரின் [illegible] மூலம் அமெரிக்க புலனாய்வுத் துறைக்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்பினார்.

அதில் ஜனாதிபதி புஷ்ஷைக் கொல்லப்போகிறேன். முடிந்தால் என்னைப் பிடியுங்கள். சதாம் ஹுசைன் நீடுழி வாழ்க என்று குறிப்பிட்டிருந்தார். வோல்கர், இன்று அங்குள்ள நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுகின்றார். இவர் மீதான குற்றம் நிருபிக்கப்பட்டால் இவருக்கு 10 ஆண்டுகால சிறைத் தண்டனை அல்லது 4 கோடி ரூபா அபராதம் விதிக்கப்பட வாய்ப்புள்ளது என்று சட்டத்துறை வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசு

வடக்கு - கிழக்கு மாகாணசபை

வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்

கடன் இல.: 2880 சி.இ.

தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்

(நிர்மாண வேலைகள்)

## கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி.

ஐ.எவ்.பி.இல:ஜே.எவ்/நீர்ப்/டிபிடிஏச்எஸ்/03 திகதி: 18.08.2003

1. வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடம் இருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.
ஐ.பி.ஆர்.டி. (IBRD) கடன் வசதி ஐ.டி.ஏ. (IDA) நம்பிக்கையின் கீழான வசதி.
2. மாவட்ட செயலாளர் யாழ்ப்பாணம், இலங்கை அவர்களினால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடம் இருந்து பின்வரும் கட்டட தொகுதிகள் நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.
3. மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1,000/= ஐக் காசாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் மாற்றத்தக்கதான யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) சமர்ப்பிப்பதன்பேரில் பிரதம எந்திரி, கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் அவர்களிடம் இருந்து 17.09.2003ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிவரை கேள்விப்பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களைப் பிரதம எந்திரி (கட்டடங்கள்) யாழ்ப்பாணத்தில் இலவசமாகப் பார்வையிடுவதோடு, மேலதிக விவரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம எந்திரி,
கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்),
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி / தொலைநகல் இல.: 021-222 2632

5. சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்தில் இருந்து 90 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல்வேண்டும். அத்துடன், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப்பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு, *அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு 18.09.2003ஆம் திகதி பிற்பகல் 15.00மணிக்கு முன்னர் கையளிக்கப்படல் வேண்டும். அதேதினம் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டுத் திறக்கப்படும்.
6. வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

### விவர அட்டவணை

| கேள்விக்குறியீடு | வேலை விவரம் | கேள்விப்பிணை ரூபா | கேள்வி ஆவணங்களின் பெறுமதி ரூபா | வேலை முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 1) ஜே.எவ்./நீர்ப்/டிபிடிஏச்எஸ்/10 | பண்ணை காசநோயாளர்களுக்கான வைத்தியசாலையும் சிகிச்சை கூடமும் மீள்நிர்மாணம் | 300,000/= | 1,000/= | 12மாதம் |
| 2) ஜே.எவ்./நீர்ப்/டிபிடிஏச்எஸ்/11 | பண்ணை வைத்தியசாலையில் மருந்துக் களஞ்சியம் மீள்நிர்மாணம் | 200,000/= | 1,000/= | 11மாதம் |
| 3) ஜே.எவ்./நீர்ப்/டிபிடிஏச்எஸ்/12 | பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் தாதிகளுக்கான விடுதி மீள்நிர்மாணம் | 175,000/= | 1,000/= | 10மாதம் |
| 4) ஜே.எவ்./நீர்ப்/டிபிடிஏச்எஸ்/13 | ஊர்காவற்றுறையில் வைத்திய அதிகாரி அலுவலகம் மீள்நிர்மாணம் | 140,000/= | 1,000/= | 10மாதம் |
| 5) ஜே.எவ்./நீர்ப்/டிபிடிஏச்எஸ்/14 | வட்டுக்கோட்டையில் வைத்திய அதிகாரிகளுக்கான விடுதி மீள்நிர்மாணம் | 62,000/= | 1,000/= | 8மாதம் |
| 6) ஜே.எவ்./நீர்ப்/ச.சே./01 | முதியோர் இல்லம் கைதடியில் 12 படுக்கைகள் கொண்ட வாட் மீள் நிர்மாணம் | 40,000/= | 1,000/= | 6மாதம் |
| 7) ஜே.எவ்./நீர்ப்/ச.சே./02 | கைதடியில் உள்ள முதியோர் இல்லத்திற்கு நீர் வழங்கல் மீள் நிர்மாணம் | 32,000/= | 1,000/= | 6மாதம் |

7. கேள்விதாரர்கள், கேள்விதாரருக்கான செயற்பிரமாண குறிப்புகள் 4ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

**செ.பத்மநாதன்,**
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(C/29535) (26-24-16-13)






## வாராந்த நிகழ்வு

வடமராட்சி.ஓக.18

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பெரியபுராணம் என்னும் தலைப்பில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

பேரவைத் தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை இளைப்பாறிய ஆசிரியர் இ.சொக்கலிங்கம் நிகழ்த்துவார். (எ-173)

## எழுதுநர்களுக்கான பயிற்சிநெறி

முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தால் புதுமுக எழுதுநர்களுக்காக நடத்தப்படும் பயிற்சிநெறி யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையும் நான்கு நாள்கள் காலை 8.30 தொடக்கம் மாலை 5.30வரை நடைபெறவுள்ளது.

நாளை ஆரம்பமாகவுள்ள முதல் நாள் நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனும், கௌரவ விருந்தினராக மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகமும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-10)

## வத்திராயனில் மீன் சந்தை திறப்பு

யாழ்ப்பாணம்.ஓக.18

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள வத்திராயன் கிராமத்தில் கடற்றொழிலாளர் நன்மை கருதி வத்திராயன் கடற்றொழிலாளர் சங்கம் மீன் சந்தை ஒன்றைத் திறந்துள்ளது.

வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்திற்கு அண்மையில் உள்ள இடத்தில் இந்த மீன்சந்தை திறக்கப்பட்டுள்ளது. (எ)

## மிருசுவில் பாடசாலைக்கு தளபாடங்கள் அன்பளிப்பு

தென்மராட்சி.ஓக.18

மிருசுவில் வடக்கு அ.த.க. பாடசாலைக்கு ஒரு தொகுதி மாணவர் தளபாடங்களை 'நிக்கொட்' நிறுவனத்தினர் வழங்கியுள்ளனர்.

375 மாணவர்களைக் கொண்ட இப்பாடசாலைக்கு 50 மேசைகளும், 50 கதிரைகளும் கடந்த வெள்ளியன்று வழங்கப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் த.சடாச்சரம் தெரிவித்தார். (எ-117)

## சங்கானையில் ஷெல், கிரனேட் சனியன்று மீட்பு!

சங்கானை சிலம்புப் புளியடி இந்து இளைஞர் மன்றத்தின் விளையாட்டு மைதானத்தை துப்புரவாக்கும் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்களினால் ஒரு அடி நீளமான ஷெல் ஒன்றும், கிரனேட் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள பற்றைகள் நிறைந்த காணியொன்றைத் துப்புரவாக்கும்போதே இவை கண்டெடுக்கப்பட்டன. இதுபற்றி சங்கானைப் பொலீஸில் முறையிடப்பட்டுள்ளது. (எ-29)

## பாடசாலை மண்டபம் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்.ஓக.18

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் 'யுனிசெவ்' அனுசரணையுடன் அமைக்கப்பட்ட பாடசாலை மண்டபம் கடந்த புதனன்று திறந்துவைக்கப்பட்டது.

இந்தத் திறப்புவிழா மகாவித்தியாலய அதிபர் வ.யோகநாதன் தலைமையில் நடைபெற்றது. தமிழீழ தேசியக் கொடியை சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவைச் சேர்ந்த காண்டீபன் ஏற்றிவைத்தார்.

மண்டபத்தை 'யுனிசெவ்' பிரதிநிதி மைக்கல் கோப்லண்ட் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். (எ)

## வவுனியாவில் நூறு குளங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்.ஓக.18

வவுனியா மாவட்டத்தில் 'நியாப்' திட்டத்தின்கீழ் 100 குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன. இதில் 20 குளங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் உள்ளவை எனத் தெரிவிக்கப்பட்டது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# தடம்புரளப் போவது எது? சமாதான முயற்சியா? அரசா?

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசு சமர்ப்பித்துள்ள வரைவு குறித்து விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்கள் எதிர்வரும் 21ஆம் திகதியளவில் பாரிஸில் சட்ட அறிஞர்களுடன் கூடி ஆலோசனை நடத்தவிருக்கின்றார்கள்.

இந்த வரைவுக்குப் புலிகள் தமது தரப்புத் திருத்தங்களைச் சமர்ப்பித்த பின்னர் செப்ரெம்பர் பிற்பகுதியில் அரசு - விடுதலைப் புலிகள் சமாதானப்பேச்சு மீண்டும் ஆரம்பமாகும் என்று அரசுத் தரப்புப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக இடைநிறுத்தப்பட்டு, தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்கள் அவ்வளவு விரைவில் மீண்டும் தொடங்குமா என்பதை இப்போதே அறுதியிட்டு கூறுவதற்கு சாதகமான அம்சங்கள் வெகுகுறைவாகவே உள்ளன.

எனினும், சமாதானப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகும் என்பதே அரசுத்தரப்பின் எதிர்பார்ப்பு, நம்பிக்கை, விருப்பம் எல்லாம்.

தடம் விலகியிருக்கும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் அதன் தடத்தில் ஏற்றுவதில் அரசுத்தரப்பு இவ்வளவு நம்பிக்கையாக இருக்கும் அதேசமயம், ஜனாதிபதியின் தரப்போ அதனை முற்றாக தடம்புரளவைப்பதில் முனைப்பாக இருப்பதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச நாடுகளில் நாடாளுமன்றக் குழுக்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதை நேரில் அறிந்துகொள்வதற்காக சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் - எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சி எம்.பிக்கள் ஆகியோரும் அடங்கிய - நாடாளுமன்றக் குழுவொன்று எதிர்வரும் 9ஆம் திகதிமுதல் தென்னாபிரிக்கா, கனடா, ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆனால், இந்தச் சுற்றுலாவில் பங்குபற்றவேண்டாம் என ஜனாதிபதி குமாரதுங்க வழங்கிய பணிப்புரையை அடுத்து, இச்சுற்றுலாவுக்குத் தாங்கள் வரமுடியாதென எதிர்க்கட்சித் தலைவரும் ஏனைய எதிரணி எம்.பிக்களும் சபாநாயகருக்கு அறிவித்திருக்கின்றனர்.

நாடாளுமன்றத்தில் சில முக்கிய நடவடிக்கைகளை தான் எடுக்கவிருக்கின்றார் என்பதாலேயே செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் எதிர்க்கட்சி எம்.பிக்கள் எவரும் வெளிநாடு செல்லாமல், நாட்டில் இருப்பதை உறுதிப்படுத்த ஜனாதிபதி விரும்புகின்றார் என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

தங்களது முக்கியமான வெளிநாட்டுச் சுற்றுலா தங்கள் கையைவிட்டு நழுவிப்போகின்றதே என்று எதிர்க்கட்சி எம்.பி. ஒருவர் ஜனாதிபதியிடம் ஆதங்கம் தெரிவித்தபோது "கவலைப்படாதீர்கள் நவம்பருக்குப் பின்னர் உங்களுக்குத் தேவையான அளவு வெளிநாட்டுச் சுற்றுலாக்களை நானே ஏற்பாடு செய்து தருகிறேன்!" என்று உறுதி கூறினாராம் ஜனாதிபதி எனத் தகவல்.

இது செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் அதிரடி அரசியல் நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதி தயாராகிவிட்டார் என்பதையே காட்டுகின்றது என்று அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

பெரும்பாலும், எம்.பிக்களை அணி தாவவைத்து, நாடாளுமன்ற அட்சரகணிதத்தை மாற்றியமைத்து, அதன்மூலம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையலான ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கவிழ்த்து, தனது சார்பான ஓர் அரசை அமைப்பதற்கு ஜனாதிபதி முயலக்கூடும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை, அடுத்துவரும் மாதங்களில் மீண்டும் தடத்துக்கு ஏற்றலாம் என்ற நம்பிக்கையுடன் ரணிலின் அரசு ஒருபுறம் முயல, மறுபுறம் ரணிலின் அரசையே தடம்புரள வைக்கலாம் என்ற நம்பிக்கையில் - நப்பாசையில் - முனைப்பாக நிற்கின்றனர் ஜனாதிபதியும் அவரது அணியினரும்.

ஜனாதிபதியின் இந்தத் திட்டம் செயலுருப் பெறுமானால் தற்போது தடம் விலகி நிற்கும் சமாதானப் பேச்சுக்கள் நிரந்தரமாகவே தடம்புரண்டு போகும் ஆபத்து ஏற்படலாம். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் அது முழு நாட்டுக்குமே பேரழிவாய்ப் போய் முடியும் என்பதே பலரின் அச்சமாகும்.

# புலிகள் ஒப்பந்தத்தை மீறுவது மனவேதனையைத் தருகின்றது

## அமைச்சர் ஹக்கீம் கூறுகிறார்

மட்டக்களப்பு,ஓக.18

விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறி வருவது மனவேதனையைத் தருகிறது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், துறைமுகங்கள், கப்பல் துறை அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சம்மாந்துறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:-

அரசு எடுத்துவரும் சமாதான முயற்சிகளுக்கு எவரும் இடையூறாகச் செயற்படக்கூடாது.

நாட்டின் சுபீட்சத்திற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் அரசுடன் சேர்ந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாடுபடும்.

விடுதலைப் புலிகள் அரசுடன் செய்துகொண்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தினை அடிக்கடி மீறி வருகின்றனர். இது மக்கள் மத்தியில் அச்சத்தையும், கவலையையும் ஏற்படுத்தி வருகின்றது.

தற்போது இயங்கிவரும் யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்களால் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால், இலங்கையின் நட்பு நாடுகள் கண்காணிப்புக் குழுவில் இணைந்து சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க உதவவேண்டும் - என்றார். (ம-12)

# 'யுனிசெவ்' அமைப்பின் உதவியுடன் வன்னியில் சுகாதார நிலையங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.18

வன்னியில் 'யுனிசெவ்' அமைப்பின் உதவியுடன் 10 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன. இதற்கான வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ரி.சத்தியமூர்த்தி இத்தகவலைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் விடுத்த செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

'யுனிசெவ்' அமைப்பின் 2003 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்தக் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இராமநாதபுரம், உதயநகர், 4ஆவது மைல்கல், கனகாம்பிகைக்குளம், ஆனைவிழுந்தான், கௌதாரிமுனை, ஆலங்கேணி, இயக்கச்சி, கிராஞ்சி, புளியம்பொக்கணை, வாடியடி ஆகிய இடங்களிலேயே தற்போது ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், கிளிநொச்சி வைத்தியசாலையில் நோயாளர்களின் நன்மைகருதி புதிதாக கட்டப்பட்ட வாட்டுக்கள் நோயாளர் பாவனைக்காக அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து மாவட்ட வைத்தியசாலைகளில் தொண்டராக பணிபுரிவோருக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

கஷ்டப் பிரதேசங்களில் வேலை செய்வதற்கான வைத்திய பிரயாணப்படி போன்ற வைத்திய மேம்பாட்டுத் திட்டங்களும், சுகாதார ஊழியர்களுக்கான பயிற்சி பட்டறைக்கான ஒதுக்கீடுகளையும் சுகாதார வைத்திய சேவைகளுக்கான கொடுப்பனவுகளையும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு 'யுனிசெவ்' அமைப்பு உதவவுள்ளது.

தேசிய மட்டத்தில் நடைபெற்ற சின்னமுத்து நோய்க்கு எதிரான தடைஊசி ஏற்றும் நிகழ்வு சூரிய மின்கலம் மூலம் இயங்கும் குளிர்சாதனப் பெட்டிகளின் பயன்பாடு காரணமாக 97 சதவீதம் வெற்றிபெற்றுள்ளது.

இவ்வாறான உதவிகள் கிடைக்கும் பட்சத்தில் இவ்வருட வேலைகளை எதுவித தடையுமின்றி நிறைவேற்றக்கூடியதாக இருக்கும் - என்று அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

# கிளிநொச்சியில் மீளக்குடியமர்ந்த குடும்பங்கள் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.18

கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தரமாக வசித்து வந்தவர்களில் இடம்பெயர்ந்த பின்னர் மீண்டும் குடியமர்ந்த குடும்பங்களின் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பின் மீளக்குடியமர்ந்த மக்களை அவற்றிலும் குறிப்பாக இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு குறைந்த வருமானமுள்ளவர்களை கிராம அலுவலர் அல்லது கிராமிய மட்டப் புனர்வாழ்வுக் குழுக்களுடன் தொடர்பு கொண்டு எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்குரிய படிவங்களை நிரப்பி குடும்பப் பதிவு அட்டைகளைப் பெற்று ரூ.25 ஆயிரம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் கிளிநொச்சி அரச அதிபர் கேட்டுள்ளார். (எ)

# நல்லூரில் மீளக்குடியமர்ந்தோருக்கு வீடுகள் அமைக்க ரூ.45லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஓக.18

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு 45 லட்சத்து 60ஆயிரம் ரூபா செலவில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

வீடமைக்கும் திட்டத்திற்கான நிதியினை அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தினர் ஒதுக்கியுள்ளதாக நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது மீளக்குடியமர்ந்த மக்கள் சொந்த வீடுகள் இன்றியும், வீடுகள் முற்றாக இடிந்த நிலையிலும் வாழ்ந்து வருகின்றனர். இதனை நிவர்த்தி செய்யும் வகையில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மக்களுக்கென இந்த வீட்டுத் திட்டம் அமைக்கப்படவுள்ளது.

மீளக்குடியமர்ந்தவர்களில் 49 பேருக்கு அரை நிரந்தர வீடுகளும், 18 வீடுகளின் திருத்த வேலைகளுக்கும் மற்றும் 118 தற்காலிக குடிசைகளை அமைப்பதற்கும் இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

குறிப்பாக அரை நிரந்தர வீடுகளை அமைப்பதற்கென 24லட்சத்து 70ஆயிரம் ரூபாவும் திருத்த வேலைகளுக்கென 2லட்சத்து 85ஆயிரம் ரூபாவும் மற்றும் தற்காலிக குடிசைக்கென 18 லட்சத்து 5ஆயிரம் ரூபாவும் பயன்படுத்தப்படவுள்ளன.

ஒவ்வொரு அரை நிரந்தர வீட்டிற்கு 50ஆயிரம் ரூபாவும் திருத்த வேலைகளுக்கு 50 ஆயிரம் ரூபாவும், தற்காலிக குடிசைக்கு 15ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

இவ்வேலைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதனால் ஆண்டிறுதிக்குள் இந்த வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுவிடும் - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-6)

**நாளை**

ஆவணி 2
செவ்வாய்க்கிழமை
(19.08.2003)
திதி : சப்தமி
பிற்பகல் 5.19 வரை
நட்சத்திரம்: பரணி
மாலை 6.58 வரை
கரிநாள்
சுபநேரம் : 10.35 - 12.05
[illegible]
[illegible]

**உதயவாக்கு**

பழி வாங்குதல் வீரமல்ல,
[illegible] காட்டினும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ சிறுவர் விளையாட்டு விழா ஒக்ரோபரில் மட்டக்களப்பில் நடக்கும்

## விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஓக.18

தமிழீழ தேசிய சிறுவர் விளையாட்டு விழா ஒக்ரோபர் மாதம் முதல் வாரத்தில் மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் தமிழீழ விளையாட்டுத் துறையின் அனுசரணையுடன் இந்தப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன என தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மேற்படி விளையாட்டுப் போட்டிக்கான அணித் தெரிவுக்காக அடுத்த மாதம் மாவட்டங்கள் தோறும் சிறுவர்களுக்கான போட்டிகள் நடைபெறும். இவ்வாறு தமிழர் தாயகத்தை உள்ளடக்கிய அனைத்து மாவட்டங்களிலும் தெரிவுசெய்யப்படும் அணிகளுக்கான இறுதிப் போட்டிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் 9,12,13 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப்போட்டியும் நடத்தப்படும்.

மேற்படி விளையாட்டுப் போட்டிகளை சிறப்புடன் நடத்தி முடிப்பதற்கு சகல தரப்பினரும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும். தமிழீழ சிறுவர் விளையாட்டுத் தொடர்பான விவரங்கள் தமிழீழ விளையாட்டுத் துறையின் மாவட்டப் பொறுப்பாளர்களிடம் தொடர்புகொண்டு விவரமாக அறிந்து கொள்ளலாம். - என்றார். (எ-ரி)

# வரணிப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணி ஆரம்பம்

வரணி,ஓக.18

'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் வரணிப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வரணி கொடிகாமம் பிரதான வீதியின் கிழக்கே தென்மராட்சி யுத்த நடவடிக்கைகளின் போது படையினரால் பாரிய தொடர் மண் அரண் அமைக்கப்பட்டது.

அந்த அரண் பகுதிகளிலேயே கூடுதலான மிதிவெடிகள் இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகின்றது.

மிதிவெடி அகற்றும் பணிகளில் சுமார் 20 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (எ-170)

### குருநகர் பகுதியில் உள்ள

# வீடமைப்புத் திட்டத்தை புனரமைக்க ரூ. 35 மில்லியன் தேவை என மதிப்பீடு

யாழ்ப்பாணம்,ஓக.18

குருநகர் வீடமைப்புத் திட்டத்தை புனரமைப்புச் செய்வதற்கு சுமார் 35 மில்லியன் ரூபா தேவையென தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் மதிப்பீடு செய்துள்ளனர்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்த சூழல் காரணமாக குருநகர் குடியேற்றத் திட்டத்தில் உள்ள வீடுகள் கடல், விமான குண்டு வீச்சுக்களுக்கு இலக்காகி மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்து காணப்பட்டன.

தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் மீண்டும் இந்தக் குடியேற்றத் திட்டத்தை புனரமைப்புச் செய்து மக்கள் குடியேற்றத்திற்கு வேண்டிய நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் அடிப்படையில் குறிப்பிட்ட வீடமைப்புத் திட்டத்தை புனரமைக்கவென அரசினால் தற்போது நான்கு மில்லியன் ரூபா மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.அலுவலக அலுவலர் ஒருவர் தெரிவித்தார். (எ-86)

# கல்விச்சாலைக் காட்சிகள்



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.வடக்கு பிரதேச சபை கடந்தமாத இறுதியில் அளவெட்டி அருணோதயா கல்லூரியில் நடத்திய கலாசார விழாவில் இடம்பெற்ற அளவெட்டி ஈஸ்வரன் முன்பள்ளி மாணவர்களின் நடன நிகழ்வை படத்தில் காணலாம். (எ-150)



கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தில் மாணவர் தலைவர்களுக்கான சின்னஞ் சூட்டும் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது சின்னஞ் சூட்டப்பட்ட மாணவ, மாணவியர் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் செல்வி கிருபா வீரசிங்கம் மற்றும் பாடசாலை அதிபர் இ.இரவீந்திரன் ஆகியவர்களுடன் இணைந்து எடுத்துக் கொண்ட படம் இது. (எ-31)




திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்துக்கு, பழைய மாணவரான கனடாவில் வசிக்கும் த.விவேகானந்தன் குடும்பத்தினர் கணனித்தொகுதி ஒன்றை அண்மையில் அன்பளிப்புச் செய்தனர். இது தொடர்பாக இடம்பெற்ற நிகழ்வில் பழைய மாணவரின் புதல்விகள் யாழ். வலய திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் யோ.இரவீந்திரனிடம் கணனியை கையளிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், விவேகானந்தன் தம்பதிகள் ஆகியோரும் காணப்படுகின்றனர். (எ-15)



யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந்து கலாசார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரும், முன்னாள் மேலதிக அரச அதிபருமான து.வைத்திலிங்கம் மாணவன் ஒருவனுக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

அருகில் கல்லூரி அதிபர் க.இராசதுரை, பொறுப்பாசிரியை திருமதி எஸ்.பிறேம்குமார் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.18

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு உபஅலுவலகத்திற்குப் புதிய கட்டடமொன்றை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அப்பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைக்குமாறு சபையின் செயலாளர் கேட்டுள்ளார். (எ-10-95-185)

## சுயதொழில் முயற்சிக்கு ரூ.55ஆயிரம் ஒதுக்கீடு

வலி.வடக்கு,ஓக.18

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஏழு குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கு 55ஆயிரம் ரூபா நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் வியாபாரம், தையல் முயற்சி, ஆடு, மாடு வளர்த்தல் போன்ற முயற்சிகளில் ஈடுபடும் -

அதேவேளை மாதாந்த உதவிப் பணம் பெறும் குடும்பங்களுக்கே இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என பிரதேச சமூக சேவை அலுவலர் தெரிவித்தார்.

இதேவேளை - வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களுக்கு மூக்குக் கண்ணாடி, காது கேட்கும் இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளன என்றும் - அவர் கூறினார். (எ-86)

## கூட்டங்கள் ஒத்திவைப்பு

தீவுப்பகுதி தெற்கு, வேலணை பிரதேச செயலகத்தில் நாளை செவ்வாய் நடைபெறவிருந்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், பிரதேச புனரமைப்புக் குழுக்கூட்டம் என்பன தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் 22ஆம் திகதிக்கு ஒத்திவைக்கபட்டுள்ளன என உதவிப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (எ)

## ஷெல் காஸ் விலை 25 ரூபாவால் அதிகரிப்பு

கொழும்பு,ஓக.18

ஷெல் காஸின் விலை' கடந்த வெள்ளிமுதல் 25 ரூபாவால் அதிகரிக்கப் பட்டிருக்கின்றது. இதன்படி, வீட்டுப் பாவனைக்கான ஷெல் காஸ் சிலிண்டரின் புதிய விலை 595 ரூபாவாகும்.

இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படும் விலை மறுசீரமைப்புக்கு அமைய இந்த விலை உயர்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று ஷெல் காஸ் நிறுவனம் அறிவித்திருக்கிறது. உலகச் சந்தையில் காஸின் விலை அதிகரித்திருக்கின்றது.

## நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.18

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினரால் நடத்தப்பட்டுவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் சாரதா பரஞ்சோதியின் பாட் டுக் கச்சேரி இடம்பெறும்.

இதில் பக்கவாத்தியக் கலைஞர்களாக வயலின் - எம். றதீஸ்குமார், மிருதங்கம் - எம்.சிதம்பரநாதன் - முகர்சிங் - வி.ரமணன் ஆகியோர் பற்கேற்கவுள்ளனர். (எ-6)

★ ★ ★

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் சைவ மகாசபையினரால் ஆலய மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய அரங்கில் நடத்தப்பட்டுவரும் தெய்வீகத் தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்வில் இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு 'தருமிக்கு பொற்கிழி' பற்றி சி.வை.நித்தியானந்த சர்மா இசைச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (எ-6)

★ ★ ★

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி வடபிரதேச இந்துப் பேரவையால் நல்லூர் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்தப்பட்டுவரும் தெய்வீக நிகழ்ச்சித் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு நால்வர் காட்டிய நன்னெறி' என்னும் பொருளில் கலாநிதி மா.வேதநாதன் சொற்பொழிவாற்றுவார். (எ-6)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

பதினாறாம் திருவிழா



## தமிழின் தனிவேள்

கற்றைக் கலைமதி வெட்கித் தலைகுனி
கவினார் முகமலரும்
கதிர்கள் பற்பல மருளும் ஒளி திகழ்
கந்தத் தடமார்பும்
கொற்றக் குலமலை உற்றிங் குறைவெனக்
கூறிடு நற்புயமும்
கோலக் கமலம தொங்வா தெனவுரை
கொண்டிடு செங்கரமும்
வெற்றிக் கென அயில் வேலும் குலிசமும்
வேறுபல் லாயுதமும்
வீரமும் ஓங்கி விளங்கிடு மேனியை
விட்டென் விழி அகலா
சற்றென் அருகுவந் தேயருள் செய்குவை
சண்முக வடிவேலா!
சாலையும் சோலையும் சூழுநல் லூருறை
தமிழின் தனிவேளே!

- சொக்கன்.

## ஆண்டான் நீ!

பன்னிரண்டு கரம்படைத்த முருகையா! எமைப்
பரிவுடனே ஒருகையால் அணைத்திடையா!
முன்னிருந்து படைநடத்தும் முருகையா! இங்கே
முறுகி நிற்கும் படைவிரட்டி அருளுமையா!
பதினெட்டு விழிபடைத்த முருகையா! ஒரு
பாதிவிழி திறந்தெம்மைப் பாருமையா!
பதிகெட்டு வழிகெட்டுப் பாழாகினோம் – சொந்தப்
பதியினிலே வாழவைத்துக் காப்பாயையா?
ஆண்டானாய் நல்லையிலே நீயிருக்க – இங்கே
ஆளுவதோ கொடுங்கோன்மை ஏனையா?
ஆண்டாண்டாய் அழுதழுது சோர்கின்றோம் – நீ
அபயம் என வந்துவிட்டோம் பாரையா?

- நிவேதிதா.

## பொங்குது பக்தர் கூட்டம்

கொஞ்சுது தமிழ் உனக்கு
பொலியுது கொன்றை தினமும்
விஞ்சுது பக்தர் கூட்டம்
விடியலின் விளிம்பைக் கேட்டு.....
ஆடுது காவடி தினமும்
பரவுதே கற்பூர 'வாசம்
பாடுதே பக்தர் கூட்டம்
அழிவினை அடக்கக் கேட்டு.....
சூடுறாய் வண்ண மாலை
சுற்றுறாய் வீதி வலமாய்
பொங்குதே பக்தர் கூட்டம்
சமாதான வாழ்வைக் கேட்டு.....

- கி.கமலதாஸ் - யாழ். பல்கலைக்கழகம்.

## அருள் செய்வாய் வேல்முருகா!

வேட்ட வரமளிக்கும் வேலாயுத நின்மேற்
பாட்டி யற்றிப் பாடிப் பணியவே - ஓட்டமதாய்
வந்தருள் செய் நல்லூரில் வாகுபெற வீற்றிருக்கும்
கந்த வேள் சந்ததமுங் காப்பு
நல்ல மலர் கொண்டு நான் தொடுக்கு மிம்மாலை
நல்ல மணம் வீசி நாடோறும் - வல்ல குகா
நின்கழுத்தி லேநிலைத்து வாடாது நின்றொளிர
இன்னருளை ஈவாய் இயைந்து
குலவு மிரு வாலைக் குயத்தியரோ டென்றும்
உலவு வரும் ஏகாந்தா ஓங்கி - நிலவுமுயர்
பஞ்சம் மிடிபிணிகள் பாரிற் றலை காட்டாது
அஞ்சி அகல அருள் செய்வாய் வேல் முருகா.

எம்.கே.இளையப்பு.

## அவலங்கள் போக்கி அருள்வாயே!

புள்ளிக் கனக மயிலேறி
புவியைச் சுழன்ற புகழோனே
அள்ளிக் கொடுத்து னடியார்கள்
அவலங்கள் போக்கி அருள்வாயே!
வெள்ளிக் கொலுசு பளபளெனும்
வேடர் குலத்து மகளான
வள்ளிக் குகந்த மணவாளா
வளர்கின்ற நல்லைப் பெருமாளே!

- வ.சின்னப்பா - தனங்கிளப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகம் கட்டுபவர்கள் தேவை
**(BINDERS)**

புத்தகம் கட்டும் வேலையில் முன்னனுபவம் உடையவர்கள் நேரில் வரவும். மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வதியும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**பாரதி பதிப்பகம்**
**OFF SET PRINTERS**
430, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(சி-29580) (11-13-25-24)



## இதோ!
இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்.

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road, Chillaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே.இல.: 222 - 2567

(சி-29244) (24-11-13-25)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலய மாணவி செல்வி

**ஜெயந்திமாலா சிவகடாட்சம்**



அவர்கள் க.பொ.த. (உ/த) 2003 பரீட்சையில் கலைப்பிரிவில் தோற்றி A,B,C பெறுபேற்றையும் மாவட்ட நிலை 61ஐயும் பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவான தையிட்டு மகிழ்வடைவதுடன் அவர் மேலும் பல உயர்கல்வி பெற்று முன்னேற வாழ்த்துவதுடன் அவரை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*4ஆம்வட்டாரம், வேலணைதுறையூர்.*

மாமா - சிவனேசன்,
அத்தை - வசந்தகுமாரி
மச்சான் - அசோக், தீபன்.

(21528) (26-25-13-16)


## மறவன்புலோ நெற்செய்கையாளர் கவனத்துக்கு!

தென்மராட்சி,ஓக.18

காலபோக நெற்செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட தென்மராட்சி தெற்கு மறவன்புலோ பகுதி வயல்கள் அதன் உரிமையாளர்களுக்கு காண்பிப்பதற்காக எதிர்வரும் 21ஆம் திகதி அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.தவராசா ஆகியோர் தலைமையில் வயல்கள் பார்வையிடச் செல்லவேண்டியிருப்பதால் வயல்களின் உரிமையாளர்கள் அல்லது அவ்வயல்களில் நெற்செய்கை மேற்கொள்வோர் அன்றையதினம் காலை 9.00மணிக்கு முன்னர் கோயிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்திற்கு வருகைதர வேண்டுமென மறவன்புலோ விவசாய சம்மேளனத் தலைவர் அறிவித்துள்ளார்.

(எ-117)


## வைத்தியம்

செங்கண் மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி,
தலைகால் அவியல்,
சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 2459

(2015)



## குகன் கல்வி நிறுவனம்
## ஆவரங்கால்

**A/L 2004 DAY CLASS**

(கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானம்)
எமது வழமையான ஆசிரியர் குழு

ஆரம்பம்: இன்று (18.08.2003) திங்கள் பி.ப. 4.30.

(21496) (31-11-13-25)


## நீங்காத நினைவலைகள்



தோற்றம் 08 - 04 - 1927

மறைவு 31 - 07 - 2003

**அமரர் செல்லப்பா மாணிக்கவாசகர்**

திதி: துதியை

**மனிதருள் மாணிக்கமாகத் திகழ்ந்த ஐயாவே!**
**புனிதப் பிறவியில் புண்ணியமே செய்திட்டீர்**
**இனிநாம் உமது முகத்தை எப்பிறப்பில் காண்போம்?**
**ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.**

எமது குடும்பத் தலைவர் இறந்த செய்தி கேட்டு எங்களது துயரத்தில் பங்கேற்றுத் தேறுதலும் ஆறுதலும் கூறி பலவழிகளிலும் உதவிகள் புரிந்து ஒத்தாசையாயிருந்த உறவினர்கள், நண்பர்களுக்கும் மற்றும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (18.08.2003) திங்கட்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அந்தியேட்டிக் கிரியைகளிலும் நண்பகல் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.* (21535) (24-13-16-25) - **குடும்பத்தினர்.**





**சமாதானத்தை உறுதிப்படுத்துவோம்.**

பிள்ளைகள் வளர்ந்த பிறகு அவர்களது விளையாட்டுப் பொருட்களுக்கு
ஏற்படும் நிலை போல, சமாதானமும் கவனிப்பாரற்றதாகி விடுமா?
சமாதானத்தின் செழுமையை இன்று நம்பிள்ளைகள் அனுபவித்து
மகிழ்கின்றனர். அவர்களை மீண்டும் இருள் சூழ்ந்த வாழ்வில் வீழ வைப்பது
சரியா? அவர்களின் [illegible] சமாதானக் கனவை கலைப்பது முறையா?
சமாதானத்தை தங்கு தடையின்றி முன்னெடுப்போம். இது நம் கடமை.

Save the Children
in Sri Lanka

Grant McCann


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## பூங்கன்றுகள் விற்பனைக்கு

முசந்தாஸ் (சிவப்பு - பிங்), எவகிறீன், நித்தியகல்யாணி, பாரிஜாதம், ஐந்தூரியம் (சிவப்பு), மஞ்சள் கொடிப்பூ, செவ்வரத்தை, அடுக்கு நந்தியாவெட்டை, ஈரப்பலா ஆகிய கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (I.C.R.Cக்கு அண்மையில்) T.P.: 222 - 6563 (21466)

## மனையடி வாஸ்து சாஸ்திரம்

உங்களது சகல குறைகளையும் நிவர்த்தி செய்துகொள்ளவும், புதுமனை நிலையம் (மனைப் பொருத்தம்) பார்க்கவும் நீங்கள் அணுக வேண்டிய இடம்: S.S யோகராஜ் வாஸ்து வல்லுநர், 44/1, யாழ்வீதி, யாழ்ப்பாணம். T.P. 077 6082534 (சி-29525)

## தவறிவிட்டது

கச்சாய் அ.த.க. பாடசாலை மாணவன் குணசிங்கம் குமணன் என்பரது விசேட அ.அட்டை நயினாதீவு அம்பாள் ஆலய உற்சவத்திற்கு, சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண்டராகச் சென்றவேளையில் குறிகாட்டுவான் இறங்குதுறையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பாடசாலைக்கு அனுப்பிவைக்கவும்.(சி-29584)

## புத்தகங்கள்

வானொலியில் "வீடு ஒன்று விற்பனைக்கு" நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்களை நல்லூர் சிவன் கோயிலுக்கு முன்னால் உள்ள ஸ்ரீலங்கா புத்தக சாலையில் பெற்றுக்கொள்ளலாம். (21517)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌர குடும்பத்தைச் சேர்ந்த, பிரான்ஸ் வதிவிட உரிமையுள்ள, 27 வயது, 2இல் செவ்வாய், புநர்பூச நட்சத்திரமுடைய மணமகனுக்கு 1980இற்குப் பின்னர் பிறந்த, அழகிய, படித்த மணமகள் தேவை. தொடர்பு: 074 872866 (21542)

## விற்பனைக்கு

8 ஸ்ரீ தொடர் இலக்கம் கொண்ட ஒக்ஸ்போட் கார், கொழும்பில் தயாரிக்கப்பட்ட புதிய பாக்குச் சீவல் மெசின், M.D. 90 மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: இல. 27, உட்புறச் சந்தை (கடை), திருநெல்வேலி. T.P.: 077 6057591 (21538)

சொந்தப் பாவனையிலுள்ள ரவுண் AC TOYOTA வான் 51-சகல ஆவணங்களுடனும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: தொலைபேசி இல.0777 734339 (21495)

## திருமண சேவை

1969 ஆம் ஆண்டு, சுவாதி பாவம் அற்ற, லண்டன் (P.R உடன்) தொழில் பார்க்கும் மணமகனிற்குப் பொருத்தமான மணமகள் தேவை. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (21544)

1966ஆம் ஆண்டு, ஜேர்மன் (P.R உடன்) தொழில் செய்யும் (வந்துள்ளவர்), மூலம் நட்சத்திரம் மணமகனிற்குப் பொருத்தமான, அழகான மணமகள் தேவை. துரிதமாகத் தொடர்புகொள்ளவும். 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (21543)

## மணமகன் தேவை

பாலர் பாடசாலை ஆசிரியையாகக் கடமையாற்றும் 40 வயது, புநர்பூச நட்சத்திரமுள்ள மணமகளுக்குப் பொருத்தமான மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். தாரமிழந்தவரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: விளம்பர இல. 1989, C/o உதயன், யாழ்ப்பாணம். (21526)

## பல்கலை. மாணவர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,ஓக.18

யாழ் பல்கலைக்கழக 3ஆம் வருட தமிழ்த்துறை மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா தொடர்பான அவசர கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் இடம்பெறவுள்ளது. (எ-6)

## செயலகக் கூட்டங்கள் ஒத்திவைப்பு

யாழ். செயலகத்தில் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த சகல கூட்டங்களும், கலந்துரையாடல்களும் தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம் அறிவித்துள்ளார்.

மாவட்ட விவசாயக்குழுக் கூட்டம், மீளாய்வுக் குழுக்கூட்டம், பிரதேச செயலர்களுக்கான கலந்துரையாடல் என்பனவே நாளை நடைபெறவிருந்தன. இக்கலந்துரையாடல்கள் யாவும் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை முன்னர் குறிப்பிட்ட நேரத்தில் நடைபெறும் என்றும் - அவர் அறிவித்துள்ளர். (எ-5)

## கண்காட்சி

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி சபையின் அனுசரணையுடன் சாவகச்சேரி ப.நோ.கூ. சங்க மகளிர் பிரிவினரால் நடத்தப்பட்ட மனைப் பொருளியல் பயிற்சிநெறியில் கலந்துகொண்ட பயிலுநர்களால் தயாரிக்கப்பட்ட பொருள்களின் கண் காட்சியும் விற்பனையும் எதிர்வரும் 30,31ஆம் திகதிகளில் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (எ-117)


## சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## கேள்விகோரல்

**எமது பாவனையில் இருந்த 24 ஸ்ரீ 3125 இலக்க இன்ரநஷனல் (INTERNATIONAL) லொறியை விற்பனை செய்வதற்காக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகோரப்படுகின்றது. கூறுவிலைகளை முழுவிவரங்களுடன் 28.08.2003 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்பதாக *"பொதுமுகாமையாளர், சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம், சாவகச்சேரி"* என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/- சங்கத்தில் செலுத்தி கேள்விப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்ளவும்.**

**ஆகக்குறைந்த கேள்வித்தொகை ரூபா 80,000/- ஆகும். 28.08.2003 பிற்பகல் 3.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.**

**மேலதிக விவரங்களை சங்கத்தின் தலைமைக் காரியாலய கடமை நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.**

16.08.2003

தலைவர்,
(சி-29590) (25-24-11-18) சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம் (வ-து).



# NET CAFE

## Secote Information Technologies



யாழ்நகரில்

அதிசிறந்த இணைய சேவை மற்றும் கணனிசார் சேவைகள்:

✷ இன்ரநெற் ✷ ஈமெயில்
✷ இன்ரநெற் போன்
✷ கணனி அச்சுப் பதிவு (Laser Inkjet printing)
✷ CD - Writing



முற்றிலும் குளிரூட்டப்பட்ட சூழலில் P4 கணனிகள் மூலம் (128 kbps) அதிவேக இணைய சேவையைப் பெற நீங்கள் நாடவேண்டி ஒரேஇடம்:

**SECOTE INFORMATION TECHNOLOGIES (Pvt) Ltd.**

325/1, Palay Road (பரமேஸ்வரா சந்தி அருகில்),
Thirunelvely, Jaffna.

(21519) (24-11-18)






சமாதானத்தை உறுதிப்படுத்துவோம்.

இரு தசாப்தங்களாக துயரம் கண்ட நம் பிள்ளைகள் இன்று சமாதானம் கண்டு புன்னகைக்கின்றனர். இந்நிலையை நாம் நிரந்தரமாக்குவோம் என அவர்கள் நம்புகின்றனர். சமாதானத்தை முன்னெடுக்க உறுதி எடுத்துப் பாடுபடுவோம். ஒத்திவைக்காது ஒன்றுபட்டு அதனை அடைய ஒத்துழைப்போம். அவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்குவோம். இது நம் கடமை.

Save the Children
in Sri Lanka


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றிலொரு பங்கு இலங்கையர்கள் வறியவர்கள்:

# வறுமையைப் போக்குவதற்கு இலங்கை அரசு முயலவேண்டும்

## ஆசிய அபிவிருத்தி வங்கி பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.18

இலங்கையில் வாழும் மக்களில் மூன்றிலொரு பகுதியினர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். இவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்ததி வறுமையை ஒழிப்பதற்கு இலங்கை அரசு முயலவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் ஜோன்காரே.

கொழும்பில் இடம்பெற்ற தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளன நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவித் திட்டங்களில் முதன்மையானது வறுமையை ஒழித்தலாகும்.

அடுத்துவரும் நான்கு ஆண்டுகளில் இலங்கைக்கு 140 கோடி அமெரிக்க டொலர் நிதிஉதவிகளை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது.

இதில், வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள 100 கோடி அமெரிக்க டொலர் நிதி வழங்கப்படும். மிகுதி 40 கோடி அமெரிக்க டொலரும் அரசின் நிர்வாக நடவடிக்கைகளை மேம்படுத்தவென வழங்கப்படும்.

அரசின் சமாதான முயற்சிகளுக்கு உதவும் முகமாக வழங்கப்படவிருக்கும் இந்த 140 கோடி அமெரிக்க டொலர் நிதியுதவிகளில் 40 கோடி உடனடியாக வழங்கப்படும். ஏனைய நிதித் திட்டங்களுக்கு ஏற்ப வழங்கப்படும்.

இந்த நாட்டில் ஏற்பட்ட துரதிர்ஷ்டவசமான யுத்தம் இங்கு வறுமை நிலையை வளர்த்துவிட்டுள்ளது. எவ்வளவுதான் வலுவான பொருளாதார உதவிகள் கிடைத்தாலும் மனித சக்தியின் பலத்தாலேயே வறுமையை ஒழிக்க முடியும்.

மனித உயிர்களின் பெறுமதி அனைவராலும் உணரப்பட வேண்டும். இதற்கு நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும். - என்றார். (ம-12)

### விதானையார் வீதி பற்றை மூடியநிலையில்!

யாழ்ப்பாணம்,ஓக.18

கொழும்புத்துறை விதானையார் ஒழுங்கை போக்குவரத்துச் செய்யமுடியாத அளவுக்கு பற்றைகள் வளர்ந்து காணப்படுகிறது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களுக்கு பின்னர் இந்த ஒழுங்கையில் புனரமைப்புப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் ஒழுங்கையில் இருமருங்கிலும் பற்றைகள் அடர்த்தியாக வளர்ந்துள்ளதுடன் மக்கள் போககுவரத்துச் செய்யமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. (எ-17)

ஜி.ரி.இசற் அமைப்பின் உதவியுடன்

# தென்மராட்சியில் 26 பாடசாலைகளில் மலசலகூடங்கள் புனரமைக்கப்படும்

தென்மராட்சி,ஓக.18

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினர் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பின்வரும் 26 பாடசாலைகளில் யுத்தத்தின்போது சேதமடைந்த மலகூடம் மற்றும் சலகூடம் ஆகியவற்றைப் புனரமைக்கவுள்ளனர்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், நாவற்குளி மகாவித்தியாலயம், வரணி மகாவித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம், கச்சாய் அ.த.க. பாடசாலை.

கைதடி குருசாமி வித்தியாலயம், கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம, மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம், மிருசுவில் அதக பாடசாலை, மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை, சரசாலை சரஸ்வதி வித்தியாலயம், கைதடி கலைவாணி வித்தியாலயம், கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்.

கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை, கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலை, மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை, மட்டுவில் வடக்கு சாந்தநாயகி வித்தியாலயம், மந்துவில் றோ.க.த.க. பாடசாலை, நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்.

போக்கட்டி அ.த.க. பாடசாலை, அல்லாரை அதக பாடசாலை, கைதடி நவீல்ட் பாடசாலை, கைதடி அ.த.க. பாடசாலை ஆகியவற்றிலேயே புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன், வடமராட்சி கிழக்கில் உள்ள மருதங்கேணி இந்து தமிழ் வித்தியாலயம், உடுத்துறை மகாவித்தியாலயம், ஆழியவளை சீ.சீ.த.க.பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா மகாவித்தியாலயம், கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலை.

செம்பியன்பற்று றோ.க.த.க.பாடசாலை, தாளையடி றோ.க.த.க பாடசாலை, செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை, மாமுனை அ.த.க. பாடசாலை, கேவில் அ.த.க பாடசாலை ஆகிய பத்துப் பாடசாலைகளிலும் மலகூடம், சலகூடம் ஆகியன புனரமைக்கப்படவுள்ளன. (எ-117)



# உலகின் எமனாக உருவாகும் பிளாஸ்ரிக் பொருள்கள்

பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பொருள்களின் உற்பத்தியும் பயன்பாடும் நாளுக்குநாள் அதிகரித்துவருகின்றன. ஆனால், அவை எவ்விதத்தில் சூழலை மாசுபடுத்துகின்றன என்பது குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

**நாம்** நன்கறிந்த 'கிசுகிசு'பை அல்லது 'சொப்பிங்'பை முதன் முதலில் பாவனைக்கு வந்தது அமெரிக்கர்கள் சந்திரனில் காலடி பதித்த 1969 ஆம் ஆண்டிலேயாகும். விண்வெளி வீரர்கள் கழிவுகளை இடுவதற்காகவே இப்பொலித்தீன் பைகள் பாவிக்கப்பட்டன.

அறுபதுகளின் பிற்பகுதியில் பிளாஸ்ரிக்கின் ஓர் ஆக்கமாகத் தயாரிக்கப்பட்ட இந்த ஷொப்பிங் பைகள் விண்வெளி வீரர்களின் பயன்பாட்டுககுப் புறம்பாக நல்லதொரு சந்தை வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டது. விண்வெளிப் பயணம் மேற்கொண்ட விண்வெளி வீரர்களுக்கு மாத்திரமின்றி பொதுமக்களுக்கும் ஷொப்பிங் பை அவசியமானதாக மாறியது. ஆயினும், அது ஒரு தொல்லை தரும் பொருளாக மாற அதிககாலம் செல்லவில்லை. "மக்களின் நலனுக்காக" என்னும் பெயரில் தயாரிக்கப்பட்ட 'ஷொப்பிங்' பை முழு உலகத்தையும் அழிக்கவல்ல ஓர் இராட்சதனாக இன்று உருவகித்துள்ளது.

இத்தகைய நிலைக்குக் காரணம் அதன் அழிவற்ற தன்மையேயாகும். இவை உயிரியல் விஞ்ஞானப் பாதிப்புக்களுக்கு உட்படாத வகையாகும். பிளாஸ்ரிக்கின் இவ்வாறான உயர் தன்மையைக் கருதியே விஞ்ஞானிகள் பிளாஸ்ரிக் என்னும் இனத்தைக் கண்டறிந்தனர். ஆனால், அத்தகைய தன்மையே இன்று மனிதனுக்கு எதிராக மாறியுள்ளது.

இருபது ஆண்டுகள் சென்றாலும் பிளாஸ்ரிக் மக்கிவிடாது. குப்பை குவியல்களில் மாத்திரமின்றி, நீரோட்டங்களிலும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் வகைகள் மிதப்பதைக் காணமுடிகிறது. இவ்வாறு நீரோட்டங்களுடன் சேர்ந்துகொள்ளும் பிளாஸ்ரிக வகைகள் குறிப்பாக பொலித்தீன் பைகள் நீரோட்டங்களைத் தடை செய்கின்றன. பெரிய கால்வாயின் நீரோட்டத்தைக் கூட ஒரு பொலித்தன் குவியல் தடுத்து நிறுத்தும். இவ்வாறு பெரும் ஆறுகள் மற்றும் சிற்றாறுகளில் பொலித்தீன் வகைகள் சிக்கிக் கொள்வதால் அவை கரை புரண்டு பாயும் நிலையும் உருவாகின்றது.

அதேவேளை, நகரங்களை அண்டிய பிரதேசங்களின் கழிவு வாய்க்கால்களில் குவிந்துள்ள பொலித்தீன் பைகளின் பாதிப்பினால் அவற்றின் நீரோட்டம் தடைப்படுத்தப்படுகிறது. இதனால், மழைகாலங்களில் அவற்றில் நீரோட்டம் தடைப்படுவதால் வாய்க்கால்களில் நீர் தேங்குகிறது. வனப்பகுதிகளில் இலைத் துளிகளுடன் காணப்படும் பொலித்தீன் பைகளையும் உணவாகக் கொள்ளும் காட்டு மிருகங்கள் இறந்துபோகின்றன. இத்தகைய நிகழ்வுகள் பற்றிய புள்ளி விவரங்கள் கிடைக்காததால் இப் பாதிப்புக்களின் பாரதூரத்தை மக்களால் உணரமுடியாதுள்ளது.

எமது நாட்டுடன் ஒப்பிடும்போது இந்தியா 63 மடங்கு அதிக விஸ்தீரமானது. அதேவேளை, அதன் சனத்தொகையானது இலங்கையின் சனத்தொகையைவிட சுமார் நூறு மடங்கு அதிகம்

ஆயினும், இந்தியாவில் ஒருவர் ஆண்டொன்றில் பயன்படுத்தும் பிளாஸ்ரிக்கின் அளவைக் கணக்கிடும்போது நாம் இந்தியாவை விடவும் முன்னணியிலே உள்ளோம்.

தனிநபர் ஒருவர் ஆண்டொன்றுக்கு எமது நாட்டில் சராசரியாக நாலு கிலோ பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் வகைகளைப் பயன்படுத்துகின்றார். அதேநேரம், இந்தியாவில் தனிநபர் ஒருவர் இரண்டு கிலோவைப் பயன்படுத்துகின்றார்.

இதன்படி நாம் ஆண்டொன்றுக்கு 7200 தொன் பிளாஸ்ரிக்கினை உபயோகப்படுத்துகிறோம். அதாவது இந்த உக்கிப்போகாத 7 ஆயிரத்து 200 தொன் பிளாஸ்ரிக் குப்பைகள் குப்பைக் குவியல்களில் சேர்க்கப்படுகின்றன.

சந்தையில் சாதாரணமாக ஒரு கிலோ பிளாஸ்ரிக்கின் விலை சுமார் தொண்ணூறு ரூபாவாகும். இதன்படி இலங்கையில் ஆண்டொன்றுக்கு 64 கோடி ரூபாய் பிளாஸ்ரிக் பொருள்களுக்காக செலவு செய்யப்படுகிறது. இதன்மூலம் மக்கள் பிளாஸ்ரிக் மீது கொண்டுள்ள மோகம் நன்கு புலனாகிறது.

சுங்க அதிகாரசபையின் அறிக்கைகளுக்கமைய 1997ஆம் ஆண்டு இலங்கைக்கு 10ஆயிரத்து 995 மில்லியன் ரூபாய் பெறுமானம் கொண்ட பிளாஸ்ரிக் உற்பத்திகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 2 ஆயிரத்து 39 மில்லியன் ரூபா (உத்தரவாதம் வாய்ந்த பொலித்தீன்) கொள்வனவுக்காக ஒதுக்கப்பட்டிருந்தன 3ஆண்டுகளின் பின்னர் அதாவது 2000 ஆண்டு 3ஆயிரத்து 122 மிலலியன் ரூபாவுக்கு பொலித்தீன் வகைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அதேவேளை, 2000ஆம் ஆண்டின் மொத்த பிளாஸ்ரிக் பொருள் இறக்குமதக்கான தொகை 16 ஆயிரத்து 379 மில்லியன் ரூபாவாகும். எமது இல்லங்களில் பயன்படுத்தப்படும் சாதாரண பிளாஸ்ரிக் பொருள்களும் ஓிருமுறை பாவிக்கப்பட்ட பின்னர் அழிக்கப்படாவிடினும் ஓராண்டின் பின்னர் சாதாரணமாக பிளாஸ்ரிக் பாவனையில் நூற்றுக்கு 75 சதவீதமான பொருட்கள் குப்பைகள் ஆகின்றன. இதற்கமைய ஆண்டொன்றில் 5400 தொன் அளவிலான பிளாஸ்ரிக் வகைகள் குப்பைக் குவியல்களில் சேருகின்றன.

1996இல் கொழும்பு மாநகர சபைகளால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றிற்கமைய குப்பை குவியல்களில் நூற்றுக்கு 6சதவீதம் பிளாஸ்ரிக் வகைகளாகும். எனவே மேலும் 7ஆண்டுகளின் பின்னர் குப்பைகுவியல்களில் 25சதவீதமான இடத்தை பிளாஸ்ரிக் பிடிக்குமானால் அது ஒரு புதுமையனறு. ஏனெனில் கடந்த ஆறு ஆண்டுகளில் பிளாஸ்ரிக்கின் உபயோகம் அதிகரித்துள்ளமையும் 1996இற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பெற்றவை குப்பைகளாக மாறும் சாத்தியமேயாகும்.

**ஜீவிதன்**

சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள் வடுத்த எச்சரிக்கைகளுக்கு அமைவாக இலங்கையின் நிலப்பரப்பு முழுவதும் பிளாஸ்ரிக்கினால் விரைவில் மூடப்படும் நாள் வெகுதூரத்தில் இலலை என்றே கருதவேண்டியுள்ளது. மக்கள் மத்தியில் நிலவும் அதிகரித்த பிளாஸ்ரிக் பயன்பாட்டை உற்று நோக்கும் போதுமேலும் ஐம்பது ஆண்டுகளின் பின்னர் நாம் குப்பையில் வீசும் பொருள்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது வீதமானவை பிளாஸ்ரிக்காகவே இருக்கலாம். பிளாஸ்ரிக் கண்டுபிடிக்கப்பட்டு பல ஆண்டுகளை கடந்ததன் பின்னர், பிளாஸ்ரிக்கைப் பயன்படுத்தும் எமது நாடு இத்தகைய நிலைக்குத் தள்ளப்படும்போது, அதைக் கண்டுபிடித்த [illegible] இருக்கும்? என்றொரு வினா எழுவது இயல்பே அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளை நோக்குமிடத்து அவற்றின் ஓர் ஆண்டுக்கான தனிநபரின் பிளாஸ்ரின் பாவனை 100 கிலோவுக்குச் சமீபமானதாகும்.

ஆனால், அந்நாடுகளில் பிளாஸ்ரிக்கின் வகைகள் குப்பைகளாக எறியப்படுவதில்லை. பதிலாக பிளாஸ்ரிக்கின் மீள் உற்பத்திகளுக்காக அவை விற்கப்படுகின்றன. இவ்வாறாக உபயோகிக்கப் பெற்ற பிளாஸ்ரிக் வகைகள் பலமுறை வேறு உருவாக்கம் பெற்று சந்தைகளில் உலாவி வருகின்றன.

அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகள் மாத்திரமின்றி அண்டைய நாடான இந்தியாவும் பிளாஸ்ரிக் மீளுருவாக்கத்தில் இறங்கியுள்ளது. இந்தியப் பிளாஸ்ரிக் பாவனையில் நூற்றுக்கு 60சத வீதமானவைகள் மீளுருவாக்கத்திற்கு பயன் படுத்தப்படுகின்றன. சாதாரணமாக பிளாஸ்ரின்கினை 12 தடவைகள் வரை மீளுருவாக்கத்திற்குப் பயன்படுத்தமுடியும்

இலங்கையிலும் இவ்வாறான மீளுருவாக்கம் நடைபெற்றபோதிலும், மிகக் குறைந்த அளவிலேயே அது இடம்பெற்றது. அநேகமாக இம்மீளுருவாக்கங்களுக்கான தொழிற்சாலைக்ளுக்கு 8 மணி நேரப் பணிகளை முழுமையாக மேற்கொள்ளுவதற்குத் தேவையான பிளாஸ்ரிக் கழிவுகளைப் பெற முடியாதுள்ளது. இதனால் அவை மூடப்படுகின்றன. வெளிநாட்டு மக்கள் பிளாஸ்ரிக்கினை சேகரித்துப் பணம் பெறும் அதேவேளை நமது மக்களோ குப்பை மேடுகளை உருவாக்கி சுற்றுச் சூழலை மாசுபடுத்தி வருகின்றனர்.

மீளுருவாக்கம் மேற்கொள்ளப் பெற்ற 1 கிலோ பிளாஸ்ரிக்கின சந்தை விலை சுமார் ஐம்பது ரூபாவாகும். இவை அநேகமாக கருமை நிறத்தையே கொண்டுள்ளதோடு, மீளுருவாக்கத்தின் போது பிரயோகிக்கப்படும் பொருள்களின் தன்மை காரணமாக அவ்வகைப் பிளாஸ்ரிக் பளிச்சிடும் தன்மையைப் பெறுவது கடினமான ஒன்றாக உள்ளது.

மேலும் மீளுருவாக்கத்திற்கு உள்ளான. பிளாஸ்ரிக் வகைகள், ஆரம்பத்தில் பயன்படுத்தப்படும் பிளாஸ்ரிக் கொண்டுள்ள சுத்தமான தன்மையைக் கொண்டனவல்ல. இதற்கான காரணம் மள் உருவாக்கத்தின் போது பிளாஸ்ரிக்கிலுள்ள இலேசா அகலும் அழுக்குகள் அகற்றப்பட்டதன் பின்னர், எஞ்சியுள்ள அழுக்குகளாகும். இதனால் மீளுருவாக்கத்திற்கு உள்ளாகும் பிளாஸ்ரிக்கினைக் கொண்டு உணவு வகைகளை அடைத்தல் வெளிநாடுகளில் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இலங்கையைப் பொறுத்தளவில் அவ்வாறு நடைபெறுவதாகத் தெரியவில்லை. இதனால் மீளுருவாக்கதிற்கு உட்பட பிளாஸ்ரிக்கினைக் கொண்டு உணவுப் பொருள்களை அடைக்கும் உற்பத்தியாளர்கள் இருக்கவே செய்கின்றனர்.

மூல பிளாஸ்ரிக் வகைகளை விடவும் மீளுருவாக்கம் பெற்ற பிளாஸ்ரிக் வகைளின் விலை குறைவாயிருதலைக் கருதி அதிக இலாபத்தைப் பெறும் முகமாக உணவுப் பொருள் உற்பத்தில் ஈடுபட்டுள்ளோர், மீளுருவாக்கம்பெற்ற பிளாஸ்ரிக் கொண்டு போத்தல்கள், டப்பாக்களை உற்பத்தி செய்கிறார்கள். உங்களால் கொள்வனவு செய்யப்படும் 'யோகட்' மற்றும் ஐஸ்கிறீம் ஆகியவை உள்ள டப்பிகளுடன் இலவசமாக வழங்கப் பெறும் கரண்டிகள் கறுப்பு வண்ணம் கொண்டதாக இருப்பின் அநேகமாக அது மீளுருவாக்கம் பெற்ற பிளாஸ்ரிக் மூலம் செய்யப்பட்டதாகவே இருக்கக்கூடும்.

ஐரோப்பிய நாடுகளின் மின் உற்பத்திக்காக பிளாஸ்ரிக் பயன்படுத்தப்படுகிறது. பிளாஸ்ரிக்கானது பெற்றோலிய உற்பத்தியின்போது பெறப்படும் ஓர் உப பொருளாகும். ஆதலினால் உயர் வெப்ப நிலையின்போது மாற்றமடையும் பிளாஸ்ரிக்கின் மூலம பெறப்படும் சக்தி வாயுவை சுலபமாக பெற்றுக்கொள்ளமுடியும் ஐரோப்பிய நாடுகள் கழிவுகளாக கருதப்படும் பிளாஸ்டிக்கினைக் கொண்டு ஆயிரக் கணக்கான பயன்களைப் பெறும் வேளையில் இலங்கையளர்களான நாம் அவற்றைக் கொண்டு குப்பை குவியல்களை உருவாக்குகிறோம். எமது நாட்டவரில் அநேகமானோர் பிளாஸ்டிக் எனப்படும் மீளுருவாக்கம் மேற்கொள்ளப்பட இயலாத ஒன்று என்றே கருதுகின்றனர். ஆனால் அது ஒரு தவறான அபிப்பிராயமே என்பதை மக்களுக்கு உணர்த்துவதற்கு ஒரு ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

"சூழலில் உள்ள பிளாஸ்டிக் தொடர்பான இலங்கைக்கான நிலையம்" பிளாஸ்டிக் அற்ற ஓர் இலங்கையை உருவாக்குவதில் முன்வந்துள்ளது. அந்த அமைப்பு மேற்கொண்டுவரும் செயற்றிட்டத்துக்கு அமைய பிளாஸ்டிக்கின் மீளுருவாக்கத்தின் மூலமே இதற்குத் தீர்வுகான இயலுமென கருதும் அந்த அமைப்பு அதற்கு அமைய பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிக்கும் திட்டமொன்றினை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. அதேவேளை மீள்உருவாக்கப் பணியில் ஈடுபடும் சில தொழிலகங்களும் இந்நிறுவனத்துடன் இத்திட்டத்தில் இணைந்துள்ளன.

இலங்கையில் பிளாஸ்டிக் பொருள்களின் உபயோகம் நாளாந்தம் அதிகரித்துவருகிறது. எனவே பிளாஸ்டிக் வகைகளை குப்பையில் வீசி நாட்டை அழிப்பதா? அல்லது அவைகளை மீளுருவாக்கத்திற்கு உட்படுத்தி நாட்டையும், நகரத்தையும் சுத்தப் படுத்துவதா? என்பதை தீர்மானிப்பது மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஸ்தி அடக்க நிகழ்வு அறிவிப்பு



01.06.2003 அன்று இறையடி சேர்ந்த

**அமரர் C.E. குணரட்ணம்**

(ஓய்வுபெற்ற ஆளணி உத்தியோகத்தர். இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

அன்னாரின் அஸ்தி 19.08.2003 செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் பரிசுத்த மரியன்னை சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதனை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*854, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.* - திருமதி லறிசா அருள்ராஜா (மகள்).

(21561)(31-12-17)

## இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்

[illegible] பகவதி அம்மன் அருள்பெற்ற [illegible] அம்மன் வாக்குப்பெற்ற [illegible] பரம்பரை [illegible] யாழ். வருகை தந்துள்ளார். கைரேகை, [illegible], எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழில்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப்பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்கபரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்!

[illegible]

மணிசாமி P.T.R. ஈஸ்வரி அம்மா

யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி. (பழைய லிங்கம் கூல்பார் அருகில்)

இல. 54. மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம்

(வெலிங்டன் சந்தி அருகில். பெருமாள் கோவிலடி.)

பார்வையிடும் நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணி வரை.

(31-11-18) (2[illegible]1)

## நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழா – 2003

இடம் - நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

**காலம்** - 19.08.2003 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி (பு.நே.)

**தலைவர்**- திரு. இ.இராமலிங்கம்

*(மாநகர ஆணையாளரும் சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும்)*

**ஆய்வுரை** - கலாநிதி செ. திருநாவுக்கரசு

*(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை).*

மேற்படி விழாவில் பங்கு கொண்டு பயனுள்ள பல ஆக்கங்களைத் தன்னகத்தே தாங்கி வெளிவரும் நல்லைக் குமரன் மலரினைப் பெற்றுப் படித்துப் பயன்பெறுமாறு ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சைவசமய விவகாரக் குழு
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

(C29585)(11-18-31)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஒக.18

வட்டுக்கோட்டை, தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணனங் கேஸ்வரர் ஆலய கண்ணகி அம் மன் சங்காபிஷேகம் இன்று திங்கட் கிழமை காலை 8 மணியளவில் இடம்பெறவுள்ளது.

(எ-10-15)

★ ★ ★

வலி.வடக்கு,ஒக.18

மல்லாகம் பழம்பிள்ளையார் ஆலய வருடாந்த திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பதினொரு தினங்கள் இடம்பெறும் இத்திருவிழாவில் 26 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 27 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் இடம் பெறும்.

(எ-86)

## விசேட வகுப்பு

சமூகசேவை, கிராம, சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கான போட்டிப்பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள்.

ஆரம்பம் [illegible].2003 செவ்வாய் மாலை 4 மணி (பு.நே.)

ஆசிரியர்: த.தவசேகர் (B.Sc.)
டானியல் ஞாபகார்த்த கல்வி நிலையம்.

இல. 233 [illegible] வீதி, [illegible] சந்தி, (கிழக்கே, 50.m.)

(21550) (11-18-31)

## விற்பனைக்கு

ஒரு மாதம் மட்டும் பாவித்த சைக்கிள் "கியர்" விற்பனைக் குண்டு.

சோதி சைக்கிள் கடை,
196, நாவலர் வீதி,
(தேவி அச்சகத்திற்கு முன்)
யாழ்ப்பாணம்.

(21551) (25-11-18-31)

## தேவை


கணனி பக்க வடிவமைப் பாளர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.


தொடர்பு:
**திஷா ஒப் செற் பிறின்டேர்ஸ்**
இணுவில் சந்தி,
இணுவில்.

(25-11-18-31) (21546)


## இதமானகுளிர் தெரிவுகள்....

உங்கள் வாழ்க்கை முறைக்கு உகந்தவை!





**WEST POINT**

TROPICAL
Air Conditioners


Split 9000-60000 Btu/hr
Window 9000-24000 Btu/hr





- எழிலானது
- பிரதேசமயமாக்கம்
- சிக்கனமானது
- குறைந்த மின்வலு
- குறைந்த சப்தம்
- சுடிய காற்று சுற்றோட்டம்
- Epoxy எனும் துருப்பிடிக்காமல் பாதுகாக்கும் விசேட திந்தை பூசப்பட்டது.
- போதுமானளவு உதிரிப்பாகங்கள் மிகச்சிறந்த விற்பனைக்குப் பின்சேவை
- இலங்கை முழுவதும் கிடைக்கிறது

5 வருடம் கொம்பரசருக்கு உத்தரவாதம்



உலகம் பூராவும் 77 நாடுகளில் விற்பனையாகின்றது

இருபது வருடங்களுக்கு மேலாக இலங்கை முழுவதும் விற்பனையாகின்றது

பிரதான முகவர்: (ஏக விநியோகஸ்தர்)
WEST POINT HOUSE
காட்சியறை-121. யூனியன் பிளேஸ். கொழும்பு 02.
தொ.பே.:074-724413,389446 தொ.ந.074-720543
Email:jss@dialogsl.net

யாழ். முகவர்கள்
**SAAI ELECTRONICS**
646, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
தொ.பே.:021-2225025, 0777721610
தொ.நகல்.:021-222 5025

**MAHES & SONS**
[illegible]
[illegible] 0777-725258, 021-222 2552

* Plus VAT

WEST POINT, We're Air - conditioning The Earth.


## யந்திர பூஜை ஆரம்பம்



யாழ். புன்னாலைக்கட்டுவன் வடக்கு திருவருள் மிகு துர்க்கை அம்பாள் (குளத்தடி நாச்சிமார்) ஆலய கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. அதற்கான யந்திர பூஜை இன்று (18.08.2003) திங்கள் காலை 10.00 மணிக்கு ஆரம்பம். அடியார்கள் கலந்துகொண்டு இறைவி அருள் பெறுவீர்களாக.

தேவஸ்தான ஆதீன பிரதமகுரு,
பிரம்ம ஸ்ரீ ந.சபாரத்தினக்குருக்கள் -தேவஸ்தானம்.
(ஆகமப் பிரவீணா).

(21558)(18-11-31)

## துயர் பகிர்கின்றோம்

எமது சக மாணவி செல்வி சிவாஜினி எதிர்வீரசிங்கம் (H.N.D.A. 3ஆம் வருடம்) அவர்களின் அன்புத் தந்தையார்

**வல்லிபுரம் எதிர்வீரசிங்கம் அவர்களது**

திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு,ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

78,பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (21553) (11-18-31) H.N.D.A. 3ஆம் வருட மாணவர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது மின்நிலையத்தில் M.S. ஆகக்கடமையாற்றும்
திரு. இ.ஸ்ரீதரன் அவர்களின் அன்பு மனைவி

**திருமதி புஸ்பாதேவி ஸ்ரீதரன்**

அவர்களது திடீர்மறைவை அறிந்து அதிர்ச்சியும் கவலையும் அடைந் துள்ளோம். அவரது இழப்பால் அவதியுறும் ஸ்ரீதரன் அவர்களுக்கும் மற்றும் குடும்பத்தினருக்கும் எமது கவலையையும் ஆழ்ந்த அனுதாபங் களையும் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறை வனை வேண்டுகின்றோம்.

மின்பிறப்பாக்கிப் பிரிவு,
மத்திய மின்நிலையம்,
சுன்னாகம். (C/29603) (26-11-18-31) -அதிகாரிகளும், ஊழியர்களும்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லையா மகேஸ்வரி

கலைமகள் வீதி, நல்லூர் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி செல்லையா மகேஸ்வரி நேற்று (17.08.2003) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தவ ராசா மற்றும் கருணாநிதி (கஜேந்திரா ஜுவல்ஸ், கன்னாதிட்டி), கமலா தேவி, லலிதாதேவி, ரவிச்சந்திரன் (ஜேர்மனி), கருணாதேவி (ஜேர்மனி), பாலஜோதி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சரஸ்வதி, ஜெய தேவி, ராதா (ராதா நகை மாளிகை, பருத்தித்துறை), ஆனந்தநாராயணன், சுப்புலச்மி, சுரேஸ்குமார், ஜெயராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி முத்துக்குமார், சசிகலா, திருமதி ராகவன் கவிதா, சுதன், காஞ்சனா, திவாகரன், நிரோஜன், சரணியா, கீர்த்தனன், தர்ஷிகா, பார்த்திபன், பிரதீபன், நிஷாந்தன், விஸ்வப்பிரியா, ரிஷி, கார்த்திகா, கஸ்தூரி, காயத்திரி, காருண்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஐங்கரன், றஜீந்தன், தர்ஷன், கீர்த்தனா, சுவர்ணா, மதுஷன் கிருஷாந், ஷாருகாந் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2003) திங்கட்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 2.00 மணிக்கு செம்மணி இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலைமகள் வீதி,*
*நல்லூர் வடக்கு,*
*கல்வியங்காடு.* (21547) (11-18-31)

தகவல்:
கருணாநிதி (மகன்)
கஜேந்திரா ஜுவல்ஸ்
கன்னாதிட்டி.

### திருமதி விஸ்வநாதன் லீலாவதி

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு மதி விஸ்வநாதன் லீலாவதி அவர்கள் நேற்று (17.08.2003) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வநாதனின் அன்பு மனைவியும் புஸ்ப ராசா, விக்டோரியா ஞானமணி, ரமணி(கனடா), நவமணி (ராசாத்தி), தவ மணி, ஞானராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும் லோறன்ஸ், லீனஸ், தவகுலரத்தினம், சந்திரா ஆகியோரின் மாமியும் அன்ரன், விக்சன், டிறோன், யான்சி, திலக்சன், நிசாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (18.08.2003) திங்கட்கிழமை பி.ப.3.00 மணியளவில் புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்கானை றோட்,*
*அச்சுவேலி.* (21549) (11-18-31)

தகவல்:
வி.ஞானராசா(மகன்).

### செல்வி அருளப்பு மெற்றலின்

(கணக்காளர், யாழ். வர்த்தகத் தொழிலாளர் கூட்டுறவுச்சங்கம்)

குளமங்கால், மல்லாகத்தைச் சேர்ந்த செல்வி அருளப்பு மெற்றலின் (கணக்காளர், யாழ். வர்த்தகத் தொழிலாளர் கூட்டுறவுச்சங்கம்) அவர்கள் (16.08.2003) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளப்பு - செபமாலை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் திரேசா, ஜெயராசா, அருட்சகோதரி யசிந்தா, சுசென்ஸ் ஆகியோரின் அருமைச் சகோதரியும் அலோசியஸ் (கியூடெக்), புஸ்பராணி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2003) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு குளமங்கால் சவேரியார் ஆலயத்தில் திருப்பலி யின் பின், குளமங்கால் சேமக்காலையில் நல்லடக்கம் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குளமங்கால்,*
*மல்லாகம்.* (21563) (32-12-17-31)

தகவல்:
அலோசியஸ் (கியூடெக்)
(மைத்துனர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 500 |
| திகதி | 15.08.2003 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல.
5113081-5128136

**வெற்றி இலக்கங்கள்** **01 27 37 44**

**லக்கினம்** **கும்பம்**



**ஜக்பொட் பரிசு ரூபா. 3,977,400/- வெல்லப்பட்டது**

**இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,000,000/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 337,134 | 10 | 3,371,340 |
| 2 இலக்கங்கள் | 30,955 | 20 | 619,100 |
| 1 இல + லக்கினம் | 30,593 | 30 | 917,790 |
| 2 இல + லக்கினம் | 2,802 | 100 | 280,200 |
| 3 இலக்கங்கள் | 825 | 500 | 412,500 |
| 3 இல + லக்கினம் | 79 | 5,000 | 395,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 3,977,400 | 3,977,400 |
| மொத்தம் | 402,393 | - | 10,373,330 |

மொத்தப் பரிசுத் தொகை
ரூபா.10,373,330/-

தொடர் இல. 4128977க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 ஆகஸ்ட் 19ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**5124465-8-88**
**5115166-1-40**
**5115966-7-49**
**5124556-3-23**
**5117333-5-65**

PHOENIX O&M

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்



**உத்தியோகபூர்வ முடிவுகள்**

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல். 3843403 இருந்து
3861864 வரை
சீட்டிழுப்பு இல. 1427
திகதி 16.08.2003



**வெற்றி எண்கள்** **01 05 08 14 15**  போனஸ் எண் **22**

**ஜக்பொட் பரிசு**
**ரூபா.2,397,500/-** வெல்லப்பட்டுள்ளது.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 2,397,500/- | 2,397,500/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 104 | 10,000/- | 1,040,000/- |
| 3 | 5,807 | 500/- | 2,903,500/- |
| 2 | 97,660 | 20/- | 1,953,200/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 01ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 119,802 | 10/- | 1,198,020/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.8,693,220/-

**இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்**
**ரூபா.1,500,000/-**

தொடர் இல. 2877423க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 ஆகஸ்ட் 20ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**3850978-5-87**
**3847520-4-16**
**3859102-9-71**
**3845103-1-25**
**3859187-8-76**

PHOENIX O&M

4 ஆவது அகவையில்
மகா சில்க்ஸ்

நான்கு வருட சேவையில் நானாவித மக்களின் நன்மதிப்பைப்பெற்று அவர்களது உள்ளங்களில் நீங்காத இடத்தைப்பெற்று தமக்கென ஒரு தனி முத்திரை பதித்துவிட்ட ஒரேஒரு ஸ்தாபனம் இதுவே!
நவநாகரிக நங்கையர்கள் விரும்பும் நவீன பாணியிலான ஆடைத்தெரிவுகளை வரவழைத்து ஏராளமான வாடிக்கையாளர்களின் வரவேற்பைப் பெற்று இன்று முன்னணியில் திகழ்பவர்கள்:
யாழ். நகரில்!
மகா சில்க்ஸ்
32, 40 A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
உங்கள் ஆடைத் தெரிவுகளுக்கு இன்றே விஜயஞ் செய்யுங்கள்.
(29538) (25-24-11-18)

20%-25% தள்ளுபடி
COSMO
டீசல் ஜெனரேட்டர்ஸ்
• 5 வர்க்கங்கள்
• 1.8KW முதல் 10KW வரை
• சப்தமற்ற வர்க்கங்கள்
• மின்சாரத்தினால் அல்லது கைகளினால் இயக்கக்கூடியவை
• எண்ணெய் குறையும் நிலையில் தானாகவே இயக்கத்தை நிறுத்திக்கொள்பவை




மேலும் விபரங்களுக்கு:
சென்ட் அந்தனீஸ் கொன்சலிடேட்டட் லிமிட்டெட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10.
தொலைபேசி: 337286, 337283-5, 324261-5
Access Graphics

# துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலை ஆசிரியரும், எங்களது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவருமான திரு. கனேந்திரன் அவர்களின் அன்புத் தந்தையார்

**வைத்திலிங்கம் செல்லையா**

அவர்கள்19.07.2003இல் இயற்கை எய்திய மையிட்டு துயருறும் அவரது குடும்பத்தவர்களின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன், இன்றைய 31 ஆம் நாள் நினைவில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயம். (21532) (13-24-11-18) அதிபர் ஆசிரியர், ஊழியர்கள்.

# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 - 06 - 1949



உதிர்வு 18 - 08 - 1995

அமரர்
**றோமாம்பிள்ளை எப்ரஹிஸ்லாஸ்**

*ஆண்டுகள் ஒன்பது கடந்தனவே*
*ஆறவில்லை எம் கண்ணீர்*

அன்னாரது ஆத்மசாந்தித் திருப்பலி இன்று (18.08.2003) திங்கட்கிழமை மணல்காடு புனித அந்தோனியார் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவினால் துயருறும்:
மணல்காடு. மனைவி மேரிதிரேசா (மணி),
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
(சி-29582) (18-24-11) உற்றார், உறவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல்பு வாழ்வை உருவாக்கத் தவறியமையே இடைக்கால நிர்வாக அமைப்பு கோரக் காரணம்

## பேராளர் மாநாட்டில் முன்னாள் ஆணையாளர் சிவஞானம்

கிளிநொச்சி.ஓக.18

வடக்கு - கிழக்கில் அரசு இயல்பு வாழ்க்கையை உருவாக்கத் தவறியமையே விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகம் ஒன்றைக் கோருவதற்குக் காரணம்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சி.வீ.கே.சிவஞானம்.

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ் மாவட்டப் பேராளர் மாநாடு அண்மையில் பளை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழீழ மக்கள் எல்லோரும் உரிமையுடன் கூடிய சமாதான சகவாழ்வையே விரும்புகின்றனர். அவ்வாறான சமாதானத்தைத் தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தியே ஏற்படுத்தமுடியும்.

யுத்தநிறுத்த - புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு பத்தொன்பது மாதங்களாகியும், சகஜநிலை தோற்றுவிக்கப்படவில்லை. புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள்குடியமர்வு நடவடிக்கைகளும் திருப்திகரமாக முன்னெடுக்கப்படவில்லை. அதற்காக உருவாக்கப்பட்ட அமைப்புகள் செயற்படமுடியாது போயுள்ளன. அரசியல் தீர்வு எட்டப்படுவதற்கு இருதரப்புக்கும் காலஅவகாசம் தேவைப்படுகிறது.

வடக்கு - கிழக்குக்கான முழுமையான இடைக்கால நிர்வாகத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் கையளிக்கவேண்டும் என பேராளர் மாநாடு கோருகிறது.

இடைக்கால நிர்வாகம் ஒன்றும் புதிய விடயமல்ல. 1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து செப்ரெம்பர் 29ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் உருவாக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்ட முன்னுதாரணம் கொண்ட ஒன்றாகும். இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அப்போதைய அமைச்சரவையில் ஓர் உறுப்பினராக இருந்தவர்.

எனவே, இடைக்கால நிர்வாகம் அரசியலமைப்புக்கு முரணானது, புறம்பானது என்று கூறிக்கொண்டு இந்தக் கோரிக்கையை நிராகரிக்கவோ. இழுத்தடிக்கவோ முடியாது. இநத அரசமைப்பை உருவாக்கியவரே ஜே.ஆர்தான்.

இடைக்கால நிர்வாகம் தனித் தமிழீழத்துக்கு இடமளித்துவிடும் அல்லது அதற்கு சமனானது என்ற இனவாதிகளின் வாதம் அர்த்தமற்றதாகும்.

இந்நாடு சுதந்திரமடையும் போது நாம் சம பிரதிநிதித்துவம்தான் கேட்டோம். அதைத் தொடர்ந்து சமஷ்டி ஆட்சியைக் கோரினோம். இந்தக் கோரிக்கையை - கொள்கையை, முனனெடுத்த தமிழரசுக் கட்சியும், தந்தை செல்வாவும், அப்போது தனித்தமிழ்நாடு கோரிய வவுனியா சுந்தரலிங்கம் மற்றும் சுயாட்சிக்கழகம் போன்றவற்றை எதிர்த்து நின்றபோதும் சமஷ்டி என்றால் தனித் தமிழ்நாடு என தென்பகுதி அரசியல்வாதிகள் அர்த்தம் கொடுத்தனர்.

இக்கோரிக்கை தோல்வியடைந்த நிலையில் சிங்கள தேசம் எமக்கு சொல்லித்தந்த தனிநாட்டுக் கோரிகையை 1976இல் ஓர் அரசியல் தீர்மானமாக தமிழினம் முன்வைத்தது. இந்தக் கொள்கையை முன்வைத்த தேசியத் தலைவர் பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வெற்றிகரமான ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்து கடந்த 20 வருடங்களாக போராடி வந்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பு பலமான நிலையில் நின்றுகொண்டு தமிழீழத்தின் பாரிய நிலப்பரப்பை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டபோதும் கூட தனிநாட்டுக் கோரிக்கைக்கு பதிலாக ஓர் அர்த்தமுள்ள சமஷ்டி அமைப்பு முறையைப் பரிசீலிக்க தயார் எனத் தேசியத் தலைவர் தெரிவித்திருந்தும் கூட இடைக்கால நிர்வாகம் தனிநாட்டுக்குச் சமன் என்று கூறப்படுவது விதண்டாவாதமும், சமாதான விரோதமானதுமாகும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் தமிழ்த் தலைவர்கள் நீட்டிய நட்புக் கரங்களை நிராகரித்த சிங்கள அரசுகள் சந்தித்த அழிவுகளைப் பற்றியும், தேசியத் தலைவர் தற்போது நீட்டியுள்ள சமாதான நேசக்கரத்தை பற்றிக் கொள்ளத்தவறினால், அதனால் ஏற்படக்கூடிய அழிவுகள், இழப்புகள் பற்றியும் சிங்கள தேசம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

விடுதலைப் புலிகளிடம் வடக்கு - கிழக்கு அரச நிர்வாகத்தை கையளித்தால் இங்கு ஏனைய சமூகங்களும் பிரதேசங்களும் பாதிப்படையும் என்ற ஒரு கருத்து சிலகோணங்களிலிருந்து முன்வைக்கப்படுகிறது. இது முற்றிலும் தவறானது என்பதை 1987 ஆம் ஆண்டின் இடைக்கால சபை அமைப்பு தெளிவாகக் காட்டும்.

விடுதலைப் புலிகள் சார்பாக ஏழு பேரில் மூவர் வடபகுதியிலிருந்தும், ஒருவர் திருகோணமலையில் இருந்தும், இருவர் மட்டக்களப்பில் இருந்தும், ஒருவர் கல்முனையில் இருந்தும் நியமிக்கப்பட்டனர். கல்முனையைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர் ஆதம்லெவ்வை என்ற முஸ்லிம் என்பது குறிப்பிடத்தக்கது.

அப்போதைய இடைக்கால நிர்வாக ஏற்பாடு தேல்வியடைந்ததற்கு மட்டக்களப்பு மாவட்டத்திற்கான ப்ரதிநிதிகளை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா நீக்கிவிட்டு, வடக்கைச் சேர்ந்த மேலும் இருவரை தேசியத் தலைவருடன் இந்திய தூதுவர் எட்டிய உடன்பாட்டுக்கு முரணாக சேர்த்துக்கொண்டதே காரணமாகும்.

அப்பொழுது சமாதானத் தீர்வை எட்டும் பொருட்டும் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துவதற்காகவும் அதன் தலைவராக நியமிக்கப்பட்ட நான் அப்பதவியை ஏற்க முடியாதெனத் தெரிவித்தேன். அதனை அடுத்து மட்டக்களப்பைச் சேர்ந்த பத்மநாதனை தலைவராக நியமிக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டது.

எனவே, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், தேசியத் தலைவரும் இங்கு வாழும் சிங்கள, முஸ்லிம் நலன்களையும் பிரதேச நலன்களையும் கருத்திற்கொண்டு செயற்பட்டனர் என்பதை இந்த முன்னுதாரணம் தெளிவாகக் காட்டுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் தன்னாட்சி மற்றும் விடுதலை உணர்வை பிரதிபலிப்பவர்களாக இருக்கும் ஒரே ஓர் அமைப்பாகும். ஆகவேதான் அவர்களை எமது ஏகபிரதிநிதிகள் என்கின்றோம். நாடாளுமன்ற ஆசனங்களோ, கட்சிகளின் அல்லது குழுக்களின் எண்ணிக்கைகளோ இதனை தீர்மானிக்க முடியாது. இடைக்கால நிர்வாக அமைப்பு ஆயுதப் போராட்டம் நடைபெற்ற பலநாடுகளில் ஏற்படுத்தப்பட்ட பின்பே நிரந்தரத் தீர்வு எட்டப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான், கொங்கோ மற்றும் ஈராக் போன்ற நாடுகளின் இடைக்கால நிர்வாகங்கள், சமகால நிகழவுகளும் உதாரணங்களுமாகும். இவையெல்லாம் அந்தந்த நாட்டு அரசமைப்புச் சட்டங்களின் கீழ் அமைக்கப்பட்டவையல்ல. சூழநிலைக்கும், தேவைக்கும் ஏற்ப நாட்டு நலன் கருதி ஏற்படுத்தப்பட்டவை. அவ்வாறான செயற்பாடே இங்கும் தேவை.

இடைக்கால நிர்வாக ஏற்பாட்டை விடுதலைப் புலிகள இயக்கம் பேச்சுகளின் ஆரம்பத்திலோ அல்ல ஆறு சுற்றுப்பேச்சு நடைபெறும் வரையிலோ கோரவில்லை. பேச்சுக்கள் மூலம் ஏற்படுத்தப்பட்ட 'சிரான்' அமைப்பு போன்றவை செயற்பட முடியாமற்போனதும் மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்பாததும், மீள்குடியமர்வு இடம் பெறாததுமே முக்கிய காரணங்களாகும். இந்தக் கோரிக்கையை முன்வைத்து வலியுறுத்தவேண்டிய சூழ்நிலைக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தள்ளியது இந்த அரசின் தடுமாற்றமான அணுகுமுறையே என்பதை சுட்டிக்காட்டவேண்டும்.

யாழ்.குடாநாட்டு மக்களில் 22 ஆயிரத்து 334 குடும்பங்களைச் சேர்ந்த 92ஆயிரத்து 34பேர் இன்னும் இடம் பெயர்ந்து, மீள்குடியமர முடியாது இருப்பதாக அரச புள்ளிவிவரங்களே தெரிவிக்கின்றன. இதற்கான முக்கிய காரணம் ஆயுதப்படைகள் குடாநாட்டின் சுற்று எல்லைகள் யாவற்றையும் அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தியதேயாகும்.

ஆயுதப்படையினர் இப்படிச் செய்வதற்கான அடிப்படைக் காரணம் விடுதலைப் புலிகள் இயக்கம் அரசை நம்பியதுபோல, ஆயுதப்படையினர் விடுதலைப் புலிகளை நம்ப மறுப்பதேயாகும். இதற்கு மேலாக விடுதலைப் புலிகள் தம்மை தாக்குவார்கள் என்ற அச்சமும் ஒரு காரணமாகும்.

யுத்தநிறுத்தம் ஏற்பட்டு இந்த 19மாதங்களில் யுத்தமுனையில் ஒரு சன்னம்கூட விடுதலைப் புலிகளால் சுடப்படவில்லை. அப்படியான கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள தேசியத் தலைவர் பிரபாகரனை சந்தேகிப்பதற்கு பதிலாக சிங்களதேசம் அவரை நம்ப ஆரம்பிக்கவேண்டும். அப்போது அரைவாசிப் பிரச்சினைகள் தீர்ந்துவிடும்.

இந்த சந்தர்ப்பத்தில் தற்போதைய பரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் முன்னிலையில் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு 1991இல் நான் கூறிய கருத்தை மீண்டும் இந்த அரசுக்கும், சிங்களதேசத்துக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். தலைவர் பிரபாகரன் "ஆம் என்றால் ஆம், இல்லை என்றால் இல்லை." அவர் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் அவரது பலமான கருத்துக்குட்பட்டவையே. ஆகவே அவரை நம்புங்கள்.

இதனடிப்படையில் சாதகமாகச் சிந்தித்து இடைக்கால நிர்வாக அமைப்பை நிபந்தனைகள் எதுவுமின்றி விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் கையளிப்பதே இந்த நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட ஒரே வழியாகும்.

இந்தக் கோரிக்கையை நாம் மட்டுமல்லாது சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே, தாமதமின்றி இடைக்கால நிர்வாகத்தை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையளித்து சமாதானப் பேச்சுக்களைத் தொடரவேண்டும் என ஸ்ரீலங்கா அரசை வேண்டுகிறோம். இந்த நடவடிக்கைக்கு வேண்டிய ஆதரவையும், ஆலோசனையையும வழங்குமாறு சர்வதேச சமூகத்தையும் வேண்டி நிற்கின்றோம்.

நாம் கேட்பதெல்லாம் எமது தாயகதை முற்று முழுதாக நிர்வகிக்கும் உரிமையைத்தான் என்பதை சகலரும் புரிந்து கொள்ளவேண்டும் - என்றார். (எ-5)

# வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பது எப்படி?

கந்தையா முருகதாசன்
ஆசிரிய ஆலோசகர்,
தென்மராட்சி கல்வி வலயம்

"வாசிப்பு மனிதனைப் பூரணமானவனாக ஆக்கும்" என்பது காலங்காலமாகப் பயன்படுத்தப்பட்டுவரும் ஒரு தொடர். மேலெழுந்தவாரியாக நோக்கும்போது இது வாசிப்புத் தொடர்பான ஒரு வாசகமாகவே தெரியும். ஆனால், இது பொருள் பொதிந்த ஒரு வாசகம்.

கற்றற் புலம் எல்லா மனிதருக்கும் ஒருங்கே வாய்த்து விடுவதில்லை. ஒரு சிலருக்கு அன்னையின் அறிவூட்டல் கிடைப்பதில்லை. இன்னும் சிலருக்குத் தந்தையின் வழிகாட்டல் கிடைப்பதில்லை. வேறு சிலருக்கு நல்ல கல்வி வழிகாட்டல், அயலில் கிடைப்பதில்லை. பாடசாலைக் கல்வியைப் பெறாதவரும் நமது சமூகத்திலே பலர் உள்ளனர். பல்கலைக்கழகக் கல்வி என்பது இலங்கை போன்ற வறிய நாடுகளில் எல்லோருக்கும் கிடைத்துவிடுவதில்லை.

இன்றைய எமது இளைய தலைமுறையினர் மத்தியில் வாசிப்புப் பழக்கம் மிகவும் அருகியே காணப்படுகிறது. வாசிப்பில் ஈடுபடல் வேண்டும் என்ற சிந்தனையே அற்றவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர். இந்த நிலை மேலும் தொடருமானால் எதிர்காலத்தில் எம் மத்தியில் சிந்தனையாளர்களும், கல்விமான்களும், இலக்கிய கர்த்தாக்களும் அருகிப் போவதற்குரிய சூழ்நிலையே உருவாகும். சமூகத்தின் பால் அக்கறையுள்ள பலரும் இந்நிலை பற்றி விசனப்படுவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

வாசிப்புப் பழக்கம் இன்றைய இளைய தலைமுறையினர் மத்தியில் அருகிப் போனமைக்குப் பிரதான சில காரணிகளைச் சிந்திப்பது பொருத்தமாக இருக்கும்.

தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் தரமற்ற சினிமாப் படங்களும். தொலைக்காட்சி நாடகங்களும் வாசிப்புப் பழக்கத்தில் தாக்கம் செலுத்துகின்றன. இந்நிகழ்ச்சிகள் ஒருபுறம் இளைய தலைமுறையினரது நடத்தைப் பிறழ்வுகளுக்கு வழி வகுக்கின்ற அதேவேளை, அவர்களது வாசிப்பு நேரங்களையும் விழுங்கிவிடுகின்றன.

எமது பிரதேசங்களில் ஒலிபரப்பப்படும் வானொலி நிகழ்ச்சிகளும் இளைய தலைமுறையினரது நேரத்தை வீணடிக்கின்றன. இந்நிகழ்ச்சிகளில் பொது அறிவு, அறிவியல், நுண்ணறிவு சார்ந்த விடயங்கள் இணைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டாலுங் கூட அதன்பால் அவர்கள் ஈர்க்கப்படுவதைவிட சினிமாப் பாடல்களை வேண்டுவதிலும் தமது குரல் ஒலிபரப்பாக வேண்டுமென்பதிலுமே அக்கறையுடனிருப்பதையே அதிகம் காண முடிகிறது.

> **மனிதன் இழந்துவிட்ட கல்விச் சந்தர்ப்பங்கள் யாவற்றையுமே ஈடுசெய்துவிடக்கூடிய வல்லமை வாசிப்புப் பழக்கத்திற்கு உண்டு. வரன் முறையான கல்வியைத் தமது சிறிய வயதில் பெற முடியாதவர்களாக இருந்து வாசிப்புப் பழக்கத்தினால் உயர்ந்து புகழ்பெற்ற மனிதர்கள் இவ்வுலகத்தில் வாழ்ந்துள்ளனர்; வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.**

எமது பிரதேசங்களின் நூலகங்களில் கணிப்பு நடத்திப் பார்ப்போமாயின் கதை நூல்களே அதிகமாக இளைய தலைமுறையினால் இரவல் பெறப்படுவதனை அறிந்துகொள்ள முடியும். கதைகள் வாசிப்பது ஆரோக்கியமான செயல்தான். எனினும் வாசிக்கப்படும் கதைகளின் தரத்திலேயே அதன் பயன்பாடு தங்கியுள்ளது. இன்று வாசிக்கப்படும் கதைகளில் பெரும்பாலானவை, இளைஞர்களது கீழான உணர்வுகளைத் தூண்டி அவர்களை கற்பனை உலகில் சஞ்சரிக்க வைத்து மயக்க நிலைக்கு உட்படுத்தும் கதைகளாகவே உள்ளன. இதன் காரணமாக வாசிப்புப் பழக்கத்தால் ஏற்படக்கூடிய பயன்களின் எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்துகின்றன.

வாசிப்புப் பழக்கம் அருகிப்போனமைக்கு போட்டி நிறைந்த இன்றைய கல்வி உலகமும் காரணம் எனலாம். போட்டி நிலைக் கல்வி காரணமாக மாணவர்கள் பாடசாலையில் கற்கும் நேரம் தவிர ஒருநாள் பொழுதின் மீதி நேரத்தில் பெரும் பகுதியை பாடசாலைகது வெளியே தனிப்பட்ட வகுப்புக்களிலேயே செலவிடுகின்றனர்.

இதனால், பாடப் புலத்திற்குப் புறம்பாக அறிவினைப் பெறும் சந்தர்ப்பத்தை அவர்கள் இழந்து விடுகின்றனர். நூலகங்களின் பக்கம் திரும்பிப் பார்ப்பதற்குக்கூட அவர்களுக்கு நேரம் கிட்டுவதில்லை.

வாசிப்புப் பழக்கத்தைப் பிள்ளைகளிடம் ஏற்படுத்துவதில் பெற்றோரின் பங்கு கணிசமானது. பெற்றோர் தமது பிள்ளைகளுக்காகத் தம்மையும் வாசிப்புப் பழக்கத்தில் ஈடுபடுத்திக் கொள்ளல்வேண்டும். வீட்டில் வாசிப்புச் சூழலை ஏற்படுத்தி முன்மாதிரியாக விளங்கவேண்டும். குடும்ப நூலகம் ஒன்றை வீட்டில் ஏற்படுத்தி வளர்த்தெடுக்கவேண்டும். ஆரம்ப வகுப்புகளில் கல்விகற்கும் போதே அறநெறிக் கதைகள், நீதிக்கதைகள், பண்பாட்டுக் கதைகள், அறிவியல் கதைகள், புதிர்க்கதைகள் என்பவற்றைப் பிள்ளைகள் வாசிப்பதற்குச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

வசதி குறைந்த பெற்றோர் தமது வீட்டுக்கு அயலில் உள்ள நூலகங்களுக்குத் தமது பிள்ளைகளை அழைத்துச் செல்வதை வழக்கமாகக் கொள்ளவேண்டும். நூலகங்களில் நூல்களை இரவல் பெற்று வாசிக்கும் பழக்கத்தைத் தூண்டுதல் வேண்டும். இத்தகைய சூழலில் வளரும் பிள்ளைகள் பிற்காலத்தில் தம்மைத் தாமே வாசிப்பில் ஈடுபடுத்துப் பயன்பெறுவதுடன் சமுதாயத்திற்கும் பயன்படும் முறையிற் செயற்படுவர்.

வாசிப்புப் பழக்கத்தின் அபிவிருத்தியில் ஆசிரியர்களது பங்கும் பாடசாலை நிர்வாகத்தின் பங்கும் மகத்தானது.

வாசிப்புப் பழக்கத்தினைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழவேண்டும். ஆசிரியர்கள் வகுப்பறைக்குள் நுழையும்போது கற்பிக்கும் விடயம் தொடர்பான துணை நூல்கள் தவிர்ந்த நல்ல நூல்களையும் கையில் எடுத்துச்செல்ல வேண்டும். அவற்றின் பால் மாணவரது கவனத்தை ஈர்க்கும் வகையில் அறிவுரைகள் கூறுதல் வேண்டும். கற்பித்தல் நேரம் தவிர்ந்த ஓய்வு நேரங்களில் ஆசிரியர், நூலகப் பாவனையில் அக்கறை காட்டுதல் வேண்டும். கற்றற் செயற்பாடின்றி ஓய்வாக இருக்கும் மாணவரை நூலகத்திற்கு அழைத்துச் சென்று, நூல்களைத் தெரிவு செய்து, வழங்கி, வாசிக்கத் தூண்டுதல் வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக வகுப்பறை நூலகம் அமைப்பதில் மாணவரை ஈடுபடுத்துதல் வேண்டும்.

பாடவிடயங்களுடனும், பொது விடயங்களுடனும் தொடர்புடைய வினாவிடைப் போட்டிகளை நடத்தி மாணவரை வாசிக்கத் தூண்டுதல் வேண்டும்.

பாடசாலை நிர்வாகமும் மாணவரது வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டுவதில் இடையறாத அக்கறை செலுத்துதல்வேண்டும். பாடசாலை நூலகத்தை அபிவிருத்தி செய்தல், நூலகச செயற்பாடுகளை மாணவர்களுக்கு ஏற்ற வகையில் கவினுறவும், பயனுறவும் அமைத்தல். வருடந்தோறும் 'நூலக வாரம்' அனுஷ்டித்தல், நலன் விரும்பிகளிடமிருந்து நூலகத்திற்கு அன்பளிப்புக்களைப் பெறுதல், மாணவரதும் ஆசிரியரதும் பிறந்த நாள் நினைவாக நூல்களை அன்பளிப்புச் செய்யத் தூண்டுதல் போனற நடவடிக்கைகள் வாசிப்புப் பழககத்தை மாணவர்களிடம் அதிகரிக்கச் செய்யும் வழியாகும்.

இவைதவிர, இணைப்பாடச் செயற்பாடுகளையும் வாசிப்பு விருத்திக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம். காலை ஆராதனை முடிந்த பின்னர் பத்திரிகைச் செய்திகளை வாசித்தல், மாணவர் மன்றம், தமிழ் மன்றம், இந்து மன்றம் போன்ற மன்றச் செயற்பாடுகளின்போது தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகளையும், சிறுகதைகளையும் வாசிக்கச் செய்தல் போன்ற செயற்பாடுகள் மிகவும் பயன் நல்கும்.

பாடசாலைச் சமூகமும் வாசிப்புப் பழக்கத்தின் விருத்திக்குப் பங்களிப்புச் செய்யலாம். கிராமங்கள் தோறும் வாசிகசாலைகளை நிறுவுதல், புனர்நிர்மாணம் செய்தல், அபிவிருத்தி செய்தல், வாசிகசாலைகளை நூலகங்களாக வளர்த்தெடுத்தல். வாசிகசாலை மற்றும் நூலகங்களின் செயற்பாடுகளில் இளைஞர்களையும் யுவதிகளையும் ஈடுபடுத்தல் போன்ற நடவடிக்கைகளைப் பாடசாலைச் சமூகம் மேற்கொள்ள முடியும்.

இத்தகைய நடவடிக்கைகளே இன்றைய இளைய தலைமுறையினரை எதிர்காலத்தில் சிந்தனையாளர்களாகவும் சமூக சேவையாளர்களாகவும், சமயத் தலைவர்களாகவும், அரசியல் தலைவர்களாகவும் மலர வழி செய்யும். தமிழ்ச் சமூகம் ஆரோக்கியமான எதிர்காலத்தைப் பெறவும் வழி செய்யும்.

"நூலகம் அறிவுலகத்தின் திறவுகோல்" ✦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயக அணிக்கு வெற்றி

கிளிநொச்சி,ஓக.18

பிரிட்டனில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அங்கு போட்டிகளில் பங்கேற்று வரும் தமிழீழத் தாயக வலைப்பந்தாட்ட அணி நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்ட மொன்றில் கறுப்பினத்தவரின் 'வெம்பிலி' அணியை வென்றது.

பிரிட்டிஷ் தேசிய அணியில் இடம்பெற்றுள்ள வீராங்கனைகள் 'வெம்பிலி' அணியில் உள்ளனர், இந்த அணியுடன் மோதிய தமிழர் தாயக அணி 32:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. பிரிட்டனில் தமிழர் தாயக அணி எதிர்வரும் 25ஆம் திகதி புலம் பெயர்ந்த தமிழர் தெரிவு அணியுடன் மோத உள்ளது.

பிரிட்டனில் நடந்த ஆட்டங்களில் காலநிலை வேறுபாடு உட்பட பலவித சவால்களின் மத்தியிலும் தமிழர் தாயக அணி 17 அணிகளுடன் மோதி வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு போட்டி

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகதின் 44ஆவது ஆண்டு நிறைவு விழா விளையாட்டுப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது. இப்போட்டி எதிர்வரும் 23ஆம், 24ஆம் திகதிகளில் நடைபெறுமென விளையாட்டுக் கழகம் செயலாளர் அறிவித்துள்ளார்.


## மானிப்பாய் றோட்டறக்ட் கழக ஆதரவில்

# இலவச கண் பரிசோதனை முகாம்

இடம் :- சங்கானை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம்

காலம் :- இன்று (18.08.2003) திங்கட்கிழமை காலை 8.30 - மாலை 3.30 வரை

3500/- பெறுமதியான கண்ணாடிகளை 750/- இற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

அரிய சந்தர்ப்பம்! கொழும்பிலிருந்து வருகைதந்த வைத்திய நிபுணர்களால் மேற்கொள்ளப்படும் இப்பரிசோதனை முகாம் பல இடங்களில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் றோட்டறக்ட் கழகம். - இணைப்பாளர்.

(C29606) (29-14-31)


# கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தில் கணக்காளராகக் கடமையாற்றும்

**செல்வி அருளப்பு மெக்டலின் றஞ்சிதமணி**

அவர்களின் (16.8.2003 சனிக்கிழமை) திடீர் மறைவு எமக்கு அதிர்ச்சியையும் வேதனையையும் அளித்துள்ளது. அவரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்,
பொதுமுகாமையாளர்,
பணியாளர்கள்.

*யாழ். வர்த்தக தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.*

(21559) (32-14-31)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வீரசிங்கம் சிவக்கொழுந்து

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி வீரசிங்கம் சிவக்கொழுந்து நேற்று (17.08.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கத்தின் (செனித் வாச் கம்பனி) அன்பு மனைவியும் திருமதி ஜெயகௌரி, திருமதி ஜெயமலர், திருமதி ஜெயராணி, ஜெயசிங்கம், திருமதி ஜெயஈஸ்வரி, ஜெயக்குமார், ஜெயராசா, ஜெயபாலன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வீ.ஜெயசிங்கம் (மகன்).

*373/3, நாவலர் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*
T.P: 222-6567, 0777-243814,
077-615453

(21569) (29-12-17-31)

## நவரட்ணம் கணேசலிங்கம் (கணேசன்)

முல்லாத்தனை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட நவரட்ணம் கணேசலிங்கம் அவர்கள் 14.08.2003 வியாழனன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரட்ணம் - இராஜலக்சுமி தம்பதிகளின் மூத்த மகனும் பத்மாதேவியின் அன்புக் கணவரும் நவரூபனின் (கனடா) அன்புத் தந்தையும் கல்பனாவின் (கனடா) அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் விஜயகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் வரதலக்சுமி (லண்டன்), ஜெயவாணி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் தர்ஸசன் (லண்டன்), காவேரி (பிரான்ஸ்), பிரகதீசன் (பிரான்ஸ்), உமையாள் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியப்பாவும் இராமலிங்கம் - பஞ்சாமிர்தம் தம்பதியினரின் மூத்த மருமகனும் பொன்னுலக்சுமி, அன்னலட்சுமி (கனடா) ஆகியோரின் பெறாமகனும் சிவானந்தனின் (கனடா) மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொக்குவில் இல்லத்தில் நாளை (19.08.2003) செவ்வாய்க்கிழமை காலை 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பத்மாதேவி கணேசலிங்கம்
(மனைவி).

*இல.29, குளப்பிட்டி ஒழுங்கை,*
*கொக்குவில்.*

(C/29611) (29-12-17-31)

## சமாதான உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.18

பாடசாலைகளுக்கிடையிலான சமாதான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று முதல் கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட ஏழு பாடசாலைகளின் அணிகள் இதில் பங்குபற்றுகின்றன. இச்சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி இடம்பெறும்.

இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:

★ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி எதிர் கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரி.

★ வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் கொழும்பு சென் சாவேரியார் கல்லூரி.

★ யாழ் சென். பற்றிக்ஸ் கல்லூரி எதிர் யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரி. (ஒ-5)


# BARATHY

கல்வி நிறுவனம்
சித்தன்கேணி

இப்பிரதேச பாடசாலைகளில அதி உயர்ந்த பெறுபெறுகளைப் பெற்ற மாணவர்களை வாழ்த்தி, இது போன்று நீங்களும் பெற்றிட

## A/L DAY CLASS ஆரம்பமாகிறது

| | |
|---|---|
| ECO. | - மகேந்திரன் |
| COM. | - பசில் |
| ACC. | - முகுந்தன் |
| TAM. | - பாலா |
| LOG. | - R.P.சர்மா |
| H/C | - சுரேஸ் |
| GEO. | - குமரன் |
| HIN. | - தரன் |
| CHRI. | - வசந்தன |
| P/Sci. | - றஜீவன் |
| DRAMA | - சுதன் |

ஆரம்பம்: 22-08-2003 வெள்ளி

அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவும்.

(21534) (32-14-31)

# தேவை

1) பேக்கறித் தொழிலில் அனுபவம் உள்ளவர்கள்
2) விற்பனையாளர்கள்

உடன்தேவை.

நேரில் வரவும்.

றொலெக்ஸ் பேக்மாட
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,

(சி.29607) (32-14-31)

## லஷ்சுமி சினிமா இணுவில்

இன்று முதல் (18.08.2003)
அல்டிமேட் ஸ்டார்
அஜித் - சாருகான் மற்றும் பலர் நடிப்பில்

**சாம்றாட் அசோகா**

(ஹிந்தி படத்தின் தமிழாக்கம்) ரீல்ஸ்
காட்சி நேரம் 11.00, 3.00, 7.00 (புதியநேரம்).

(21565)

## நாகம்ஸ் சுன்னாகம்

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
சரத்குமார், தேவயாணி,
நெப்போலியன், விவேக் நடித்த

**தென்காசிப்பட்டணம்**

காட்சி நேரம் : 11.00, 3.00, 7.00

(31-14) (C29212)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

அர்ஜ'ன், கிரண் நடித்த

**பரசுராம்**

தினசரி காட்சி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு

**BLUE STREAK**

தினசரி 8.45 இற்கு.

(C29213) (31-14)

## ராஜா யாழ்ப்பாணம்



எதிர்வரும் 28ஆம் திகதி வரை
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு.
விஜயகாந்த், கிரண், விவேக்
நடிக்க

**தென்னவன்**

காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

(C29233) (31-14)

## லிபேட்டி அச்சுவேலி

சரத்குமார், சிம்ரன், வையாபுரி,
மணிவண்ணன்

**அரசு**

காலை 11.00 THE PEACE KEEPER

(41-14)


# பூப்பந்தாட்ட முடிவுகள்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற பூப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தின் ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகள் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

வலிகாமம் கல்வி வலய மட்டத்திலான போட்டிகள் மானிப்பாய் இந்துக் கல்லூரி பூப்பந்தாட்டத்திடலில் அண்மையில் இடம்பெற்றன.

இவற்றில் ஆண்கள் பிரிவில் முதல் இடத்தை உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயமும் இரண்டாம் இடத்தை வசாவிளான் மத்திய மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயமும் இரண்டாம் இடத்தை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

# கண்ணீர் அஞ்சலி

17.08.2003 அன்று மறைந்த எமது விரிவுரையாளர்

**திருமதி புஸ்பாதேவி ஸ்ரீதரன்**

அவர்களுக்கு கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நான்காம் வருட (98/99 கல்வியாண்டு)
மொழியியல் சிறப்புக்கலை மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

(C/29610) (29-12-17-31)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை கிருஷ்ணசாமி

நீராவியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்துரை கிருஸ்ணசாமி அவர்கள் நேற்று (17.08.2003) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் பூரணத்தின் அன்புக் கணவரும் கணேசலிங்கம், மகாலட்சுமி, தியாகலிங்கம், பூரணலிங்கம், காலஞ்சென்ற சங்கரலிங்கம் மற்றும் சிவலிங்கம், வீரலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சிவராஜா (கோகுலன் லேத் வேக்), புஸ்பவதி (ரதி), உதயராணி, காலஞ்சென்ற லீலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் சுபாங்கி, சித்திராங்கி, கர்சனன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2003) திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கி.சிவலிங்கம் (மகன்)
(இரட்டைச் சங்கு மார்க் அப்பள வியாபாரி)

*16, 2ஆம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(21564) (29-14-31)

## திருமதி பொன்னையா தங்கம்மா

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா தங்கம்மா அவர்கள் நேற்று (17.08.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னையா அவர்களின் அன்பு மனைவியும் யோகராஜா (C.T.B), பஞ்சலிங்கம், கமலராணி காலஞ்சென்ற நந்தகுமார் மற்றும் தேவராணி, குமேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் லோகேஸ்வரமூர்த்தி, அற்புதராஜா, அருந்தவராணி, இராசமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2003) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
K.P.யோகராசா
(மகன்) வ.பி.போ.சபை.
பருத்தித்துறை.

*தற்காலிக முகவரி:*
*டச்சு றோட், மகளிர் கல்லூரி அருகில், உடுவில்.*
*நிரந்தர முகவரி:*
*குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பழை.*

(21567) (32-14-31)

## திருமதி புஸ்பாதேவி ஸ்ரீதரன்

**(விரிவுரையாளர், ஆங்கில மொழியியல் பிரிவு, யாழ்.பல்கலைக்கழகம்)**

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பாதேவி ஸ்ரீதரன் அவர்கள் (16.08.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இ.ஸ்ரீதரன் (M.S. மத்திய மின் நிலையம், சுன்னாகம்) அவர்களின் அன்பு மனைவியும் பொன்னையா - பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும் இராசரத்தினம் - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும் மனோகரி (நோர்வே), சிவநாதன் (டென்மார்க்), தபோதினி ஆகியோரின் சகோதரியும் குகதாஸன் (நோர்வே), புவனேஸ்வரி (டென்மார்க்), பாஸ்கரன், முரளீதரன், வித்தியா, கோணேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜனார்த்தனி, அமரகா ஆகியோரின் சிறிய தாயாரும் நதுர்சனின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.ஸ்ரீதரன் (கணவர்)

*கொடிகாம வீதி,*
*நெல்லியடி.*

(C/29605) (29-14-31)

## திருமதி நடராசா சிவபாக்கியம் (பத்தானை, தொல்புரம்)

பத்தானை தொல்புரத்தைச் சேர்ந்த திருமதி நடராசா சிவபாக்கியம் நேற்று (17.08.2003) ஞாயிற்றுக்கிழமை சுழிபுரம் மேற்கில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் - செல்லம் தம்பதிகளின் அன்பு மகளும் நடராசா (இளைப்பாறிய கிளை முகாமையாளர் - ப.நோ.கூ.ச., சங்கானை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அம்பலவாணர், கணபதிப்பிள்ளை (ப.நோ.கூ.ச., சங்கானை), வரதராசா (ப.நோ.கூ.ச., சங்கானை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தவமலர், வசந்தமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவராமன் (உதவி அஞ்சல் அதிபர் - மாங்குளம்), ஜெயராஜசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் குலேந்திரன் (கனடா), ஜெயந்தினி (கனடா), மயூரன் (பிரான்ஸ்), வாசுகி, யோகசக்தினி, சற்குரு, பிரசன்னா, பிரவீனா, பிரசாந்த் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் துசாந்தின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2003) திங்கட்கிழமை பி.ப. 12மணியளவில் சுழிபுரம் மேற்கில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 2 மணிக்கு திருவடி நிலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம.நடராசா (கணவர்).

*சுழிபுரம் மேற்கு,*
*சுழிபுரம்.*

(C/29609) (29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் முகாம் பிரச்சினையிலிருந்து கண்காணிப்புக்குழு விலகத் தீர்மானம்

கொழும்பு,ஓக.18

குரங்குபாஞ்சான் முகாம் பிரச்சினையிலிருந்து விலகியிருப்பதென போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது. இது குறித்து நோர்வே சமாதான அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்மிடம் கண்காணிப்புக் குழு அறிவித்திருக்கிறது.

இதனால் அப்பிரச்சினையை இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் நோர்வே அனுசரணையாளர்களுமே இனிக்கையாள வேண்டுமென்று கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவரான ஹொக்லண்ட், நோர்வே சமாதான அனுசரணையாளரிடம் அறிவித்திருக்கிறார்.

முகாம் அகற்றப்பட வேண்டும் என்ற தனது தீர்ப்பை விடுதலைப் புலிகளே தொடர்ந்து மீறி வருவதால், முகாம் பிரச்சினையில் மட்டும் கண்காணிப்புப்பணியை தாங்கள் தொடர்ந்து செய்யமுடியாது என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

## புலிகளின்....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

கூறப்பட்டது.

இச்சம்பவம் இடம்பெற்ற சமயத்தில் அங்கு எவரும் தங்கியிருக்காததால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

## எமது அழுத்த.....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

கடத்திச் சென்றார்கள் என்று எப்படி நீங்கள் கூறுகின்றீர்கள்?

*ஹக்கீம்:-* அதில் எந்தவிதமான சந்தேகத்துக்கும் இடமில்லை. புலிகளுடைய கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வேறு இயக்கங்கள் செயற்படமுடியாது என மக்கள் திட்டவட்டமாக நம்புகிறார்கள். இது சர்வதேச சமூகத்துக்கே தெரிந்த விடயம்.

*கேள்வி:-* இப்போது மூதூரில் நிலைமை எப்படி உள்ளது?

*ஹக்கீம்:-* மக்களிடையே பதற்றமான நிலைமை சற்று தணிவடைந்து காணப்படுகின்றது. இருப்பினும், தமிழ கிராமங்களினூடாக மூதூருக்கு தரைவழி மார்க்கப் போக்குவரத்து இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை. புலிகளும், பொலிஸாரும் சுமுக நிலைக்குக் கொண்டுவர அனைத்து முயற்சிகளையும் உடனடியாக மேற்கொள்ளவேண்டும். இது தொடர்பில் பிரதமரை நாளை (இன்று திங்கட்கிழமை) நான் சந்தித்துப் பேசவுள்ளேன்.

*கேள்வி:-* யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவை சந்தித்து என்ன பேசினீர்கள்?

*ஹக்கீம்:-* புலிகள் இயக்கத்தின் இது போன்ற மனித உரிமை மீறல்களையும் அடாவடித்தனங்களையும் ஆவணப்படுத்தி, அதனை ஓர் அறிக்கையாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு வெளியிடவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினோம். ஒரு நழுவல் போக்கை கடைப்பிடிக்கின்ற நடுவன் அமைப்பாக கண்காணிப்புக் குழு இருப்பதில் அர்த்தமில்லை என்பதனை சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

*கேள்வி:-* புலிகளுடன் தொடர்புடைய இந்த விடயத்தைப் பற்றி புலிகளுடன் பேச்சு நடத்தினீர்களா?

*ஹக்கீம்:-* பேச்சு நடத்துவதற்குப் புலிகள் வராதபோது நாம் என்ன செய்வது? நோர்வேத்தரப்பு மற்றும் கண்காணிப்புக்குழு ஊடாக இந்தச் செய்தியைப் புலிகளிடமும் சொல்லியிருக்கிறோம். அவசரமாக ஒரு சந்திப்பை ஏற்படுத்தி இது தொடர்பாக அவர்களுடன் பேச வேண்டும்.

பேச்சு நடத்தச் சென்றாலும், எடுத்த எடுப்பிலேயே, 'இதனை நாங்கள் செய்யவில்லை' என்று புலிகள் சொல்லிவிட்டால், என்ன செய்வது?

*கேள்வி:-* முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு வழங்க அரசு என்ன செய்ய வேண்டுமென நீங்கள் கருதுகிறீர்கள்?

*ஹக்கீம்:-* அரச கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்கு அவர்கள் வழமையாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை, ஏன் மூதூர்ப் பிரதேசத்தில் செய்ய முடியாது? அதை நாம் வலியுறுத்துவோம்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தமிழகத்தில்...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

சென்றனர். பின்னர் அவர்கள் பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். விசாரணையையடுத்து நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் அனுசரிப்பில் அவர்கள் தங்கவைக்கப்பட்டனர்.

இந்த 22 பேரும் இன்று திங்கட்கிழமை, யாழ்.அரச அதிபரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று வந்து சேர்ந்தவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

பேனாட் அந்தோனி (வயது 23), அ.மனோகரி (வயது 26), அ.அனுசியா (வயது 10), அ.கிறிஸ்பி (வயது 7), அ.டெல்சி(வயது 5),

அந்தோனி பேனாட் (வயது 53), பே.ஜெயமகள் (வயது 32), ஜெணட் கவிதா (வயது 13), நூசியஸ் ஜெகிரிசா (வயது 11) ஜார்ஜ் கிளின்டன் (வயது 7),

பேனாட் சனிஸ்கிளாஸ் (வயது 27), ச.சுமதி (வயது 23), ச.நியூமன் (வயது 7), ச.கௌசியா (வயது5), ச.தியாமினி (வயது 3),

மரியான் கிறிஸ்ரி (வயது 23), தாசன் ஜமேலா (வயது 13), யோண் பென்ராசா (வயது 38), பெ.திரேஸ் குமார் (வயது 20), தில்லையம்பலம் சிறிதவக்குமார் (வயது 47), பூரண வேலுப்பிள்ளை சாமித்துரை (வயது 54), புன்னையா குட்டி சுப்பிரமணியம் (வயது68) ஆகியோரே நெடுந்தீவுக்கு வந்து சேர்ந்தவர்களாவர்.

## தமிழர்களின்...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

வகுப்பதில் எம்முடன் ஒன்று பட்டுச் செயற்பட முன்வந்தால் எந்தத் தமிழ்க் கட்சியையும் நாம் வரவேற் போம்.

விடுதலைப் புலிகளின் குறிக்கோள் தமிழினத்திற்கு சுபீட்சத்தினை ஏற்படுத்திக் கொடுப்பதே ஆகும். இதற்குக் குறுக்காக நிற்பவர்களை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

17ஆயிரத்து 690 வரையிலான இளம் தலைமுறையினர் இந்த மண்ணில் எமது இலட்சியத்திற்காக உயிர் துறந்துள்ளார்கள். இந்த நிலையிலேயே எமது இலட்சியத்திற்குத் தடையாக நிற்போரை ஏற்க முடியாத நிலையில் நாம் உள்ளோம். எந்தத் தியாக சிந்தனையும் இல்லாதவர்கள் எமது மக்களின் பெயரில் சுயலாபம் ஈட்டுவதை நாம் விரும்பவில்லை.

அதேநேரம், தமிழ்க்கட்சிகளின் உறுப்பினர்கள் கொலை செய்யப்படுவதை நாம் கண்டிக்கின்றோம். இக்கொலைகளுக்கும் எமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

சமாதான முயற்சிகளைக் குழப்பும் எந்தவொரு நடவடிக்கையிலும் இறங்கக்கூடாது என்று எமது தலைவர், ஒவ்வொரு போராளிக்கும் உறுதியாகத் தெரிவித்திருக்கிறார். எமது போராளிகள் நிராயுதபாணிகளாகவே இன்று இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நிற்கின்றனர்.

இராணுவச் சோதனைக் கெடுபிடிகளையெல்லாம் மிகவும் நிதானமாகவும், பொறுமையுடனும் தாங்கிக் கொண்டு வன்முறையில் இறங்காது அரசியல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் மீது பழிசுமத்தும் பொருட்டே இத்தகைய கொலைகள், வன்முறைகள் மேற்கொள்ளப்படுகின்றனவோ என்று எண்ணத்தோன்றுகின்றது.

விடுதலைப் புலிகளை அச்சுறுத்துகின்ற - ஆத்திரமூட்டக் கூடிய - அவமதிக்கும் வகையிலான - எத்தனையோ சம்பவங்கள் இடம்பெற்ற வேளையிலும் எமது போராளிகள் எந்தவொரு பதில் நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. எமது மக்களுக்காக நாம் எல்லாவற்றையும் தாங்குகின்றோம்.

பல தமிழ்க் கட்சிகளில் உள் முரண்பாடுகள் மிக நீண்ட காலமாகவே இருந்து வருகின்றன. அவற்றின் காரணமாகக் கூட இக்கொலைகள் இடம்பெற்றிருக்கலாம்.

இதற்காக முற்றுமுழுதாக எம்மீது குற்றம் சுமத்துவதில் எதுவித நியாயப்பாடும் இல்லை.

எம்மைப் பொறுத்தவரையில், இப்படுகொலைகள் கண்டிக்கத்தக்கவை. ஆனால், அவற்றிற்கெல்லாம் அனுதாபம் தெரிவிக்கப்போவோமானால் எமது நேரம் முழுவதும் ,அனுதாபச் செய்தி கொடுப்பதிலேயே கழிந்து விடும். - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-3-12)

## பொலீஸ்மா அதிபருடன்...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

வித்துள்ளனர்.

பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் நேற்று இக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

பொலீஸ்மா அதிபரும் இந்தியத் தூதரும் நடத்தும் பேச்சுக்களின் பயனாக இந்திய மீனவர்களின் ஊடுருவல்களுக்கு முடிவு எட்டப்படும் எனப் பொலீஸ் அதிகாரிகள் மீனவர்களிடம் அப்போது உறுதியளித்தனர்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவும் இந்திய மீனவர்களை இலங்கை மீனவர்கள் பிடிக்கும் சந்தர்ப்பங்களில, பிடிபட்ட இந்திய மீனவர்களை பொலஸாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று மீனவர்சங்கப் பிரதிநிதிகளிடம் பொலீஸ் அதிகாரிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்திய மீனவர்களால் இலங்கை மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் அபகரிக்கப்படும் போது, அது தொடர்பாக பொலீஸாருக்கு முறைப்பாடு செய்யும்படியும் -

அவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டால் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் - பொலீஸார் தெரிவித்தனர்.

## அத்துமீறிய...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

மீனவர்கள் அந்தப்படகில் இருந்தவர்களை விசாரித்தனர்.

அப்போது அந்த இந்திய மீனவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் நெடுந்தீவு கடற்பரப்புக்குள் ஊடுருவி தொழில் செய்து கொண்டிருந்த இந்திய மீனவர்களையும், அவர்களது 14 ட்றோலர் படகுகளையும் நெடுந்தீவு மீனவர்கள் பிடித்துக் கரைக்குக் கொண்டு வந்தனர்.

அதன்பின், அந்த மீனவர்களை ஊர்காவற்றுறைப் பொலீஸாரிடம் நெடுந் தீவு மீனவர்கள் ஒப்படைத்தனர். இந்த மீனவர்கள் இன்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்தச்சம்பவத்தை அடுத்து நெடுந் தீவு கடற்படை அதிகாரி மீனவர் சங்கப் பிரதிநிதிகளிடம் கலந்துரையாடி னார்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்கத் தாம் அனுமதிக்கப்போவதில்லை என்று கடற்படை அதிகாரி அப்போது உறுதி அளித்ததாகக் கூறப்பட்டது.

கடந்த 6ஆம் திகதி பருத்தித்துறை இன்பருட்டிப் பகுதியில் 10 இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடித்த சமயம், அப்பகுதி மீனவர்கள் அவர்களைப்'பிடித்து வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-3-9)

## மூதூரில்...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

முஸ்லிம் மீனவர்கள் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டு தாக்கப்பட்டுள்ளனர். நேற்றுக்காலை அவர்கள் விடு விக்கப்பட்டனர். அச்சு முஹம்மது ரஷுட், ரஷீட் டைரூஸ் ஆகிய இரு வருமே கடத்தப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரும் திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் சம்பவத்தைக் கேள்விப்பட்டதும் திருகோணமலைக்கு நேற்றுக்காலை விஜயம் செய்தார். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களது உடம்பில் தீக்காயங்களும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து இவர்களை மேலதிக சிகிச்சைக்கென கண்டி வைத்தியசாலையில் சேர்க்கும்படியும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இரு மீனவர்கள் கடத்தப்பட்டமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுமென கண்காணிப்புக்குழுவினர் அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் உறுதியளித்தனர்.

மூதூர்நகரில் உள்ள தமிழ் மக்கள் அச்சம் காரணமாக கிளிவெட்டிக்குச் சென்று தங்கியுள்ளனர். கடந்த சனிக்கிழமை சில அச்சுறுத்தல் சம்பவங்கள் நடைபெற்றன.

மூதூர் கிழக்குப் பகுதியிலுள்ள நோயாளர்களை மூதூர் மருத்துவமனைக்குக் கூட்டிவர முடியாதிருக்கின்றது. அவர்கள் கிளிவெட்டியூடாக திருகோணமலை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்படுகின்றனர். (ஒ)

CCS
GLOBAL VILLAGE
Computer Education
புதிய பிரிவுகள்
ஆரம்பம் : 20&23.08.2003
★ கணனி பராமரித்தல்
* Repairing
* Software Installation
★ CD றைட்டிங்க்
* CD to CD
*VHS to CD
★ கணனி விற்பனை
College of Computer Studies
302/1, நாவலர் வீதி.
ஆனைப்பந்தி.
யாழ்ப்பாணம்.
0777-279034.
(31-12-14-31) (21514)

SPECIAL ENGLISH COURSE
Duration 9 months
SPOKEN WITH GRAMMAR
START ON 25.08.2003
CONDUCT
THE COLLEGE OF DEGREE STUDIES
57/13, STANLEY ROAD,
JAFFNA.
By.R.A.NIROJAN
(சி.29495) (32)

C.C.A.
சுன்னாகம்
A/L Day Class
கலை, வர்த்தகம்
ஆரம்பம்:இன்று18.08.2003
காலை 8.00a.m.
(12) (21428)

LOGIC - II
எஸ்.எஸ். மனோகரன்
A/L - DAY
ஆரம்பம்: புதன் மாலை 4மணி
FURTHER EDUCATION
(உடுவில் மகளிர் கல்லூரி)
(21508) (26)

விற்பனையாளர்கள் தேவை
புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் தேவை.
தொடர்புகளுக்கு:
த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44, 42. பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
(21367) (31-12-17)

December முதல்
aat பரீட்சை யாழ்.நகரில்
Dec. aat பரீட்சைக்குத் தோற்ற உள்ள மாணவர்களுக்கான காலம் கடந்த பதிவுக்குரிய இறுதி நாள் 22.08.2003.
பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள் 22.08.2003 நண்பகல் 12.00 மணிக்கு முன்பு எமது அலுவலகத்தில் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும்.
CAREER. COM INSTITUTE
No:79, Main St. Jaffna.
அலுவலக நேரம் : 10.00 a.m- 2.00 p.m.
(சி-29602) (31-12-17)

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட் யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ் வீதி இணுவில்.
A/L DAY CLASS
இரு இடங்களிலும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

| பாடம் | யாழ்நகர் | இணுவில் |
|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | வரதராஜன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| அளவையியல் | R.P.சர்மா | R.P.சர்மா, ஜெயசுரேஸ் |
| புவியியல் | குமரன் | குமரன் |
| இந்துசமயம் | தரன் | தரன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| அரசியல் | றஜீவன் | றஜீவன் |
| நாட.அரங்கியல் | சுகந்தன் | சுதன் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் |

(21552) (32-12-31)

மொடேன் கல்வி நிலையம்
நெல்லியடி, பருத்தித்துறை.
A/L DAY CLASS
கலை, வர்த்தக பிரிவு
Eco. திரு.லோகசிங்கம்
Acc. திரு.பவான்
Com. திரு.சிவராஜா
Tam. திரு.நடா
Lo. திரு.நவம், சுரேஷ்
H.c. திரு.ஜோதீஸ்
Dra. திரு.கனகேஸ்வரன்
Sat. திரு.பஸ்தீ
Eng. திரு.நிஷாந்தன்
ஆரம்பம்:
இன்று 18.08.2003 திங்கள்
பொருளியல் 3.00p.m.
(ப.நே.)
(21467) (26-12-17-31)

LLION AIR
லயன் ஏயர்
தினமும் காலையும் மாலையும் பாதுகாப்பான கொழும்பு விமான பயணத்திற்கு,
GENERAL SALES AGENT
&
HANDLING AGENT,
90, KANTHAPPASEGARAM ROAD,
JAFFNA.
Tel : 021 - 222 2504, 021 - 222 2823
Fax : 021 - 222 2040
அவசர தொடர்புக்கு
HOTLINE : 0777 - 382343
0722 - 401423.
(C29348) (12-18-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.